Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:– பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 20 | திங்கட்கிழமை (05.12.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 351



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து


## கோண்டாவிலில் பயங்கரம்

# கிளைமோர்த் தாக்குதலில் இராணுவ டிரக்டர் சிதறியது

## ஆறு இராணுவத்தினர் பலி; நால்வர் படுகாயம்

## பலாலி வீதியில் பெருமளவில் இராணுவம் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலிவீதி கோண்டாவில் சந்திக்கு அண்மையில் நேற்று பி.ப.1.15மணியளவில் இராணுவ உழவு இயந்திரத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் 6 இராணுவத்தினர் ஸ்தலத்தில் பலியாகினர்.3 பொது மக்கள் உட்பட 4 பேர் படுகாயமடைந்தனர்.

7 இராணுவத்துடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த உழவு இயந்திரம், கோண்டாவில் சந்திக்கு அண்மையில் மரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் வெடித்ததில் தூக்கி வீசப்பட்டது.

அச்சுவேலி 51வது இராணுவப் பிரிவில் இருந்து பலாலி வீதியில் உள்ள முகாம்களுக்கு உணவு வழங்கிக்கொண்டிருந்த உழவு இயந்திரம் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 7 இராணுவத்தினருடன் வந்த அவ் உழவு இயந்திரம் கோண்டாவில் சந்திக்கு அண்மையில் வந்து கொண்டிருந்த போது கிளைமோர்த்தாக்குதலுக்கு இலக்கானது.

மரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த மூன்று கிளைமோர்களில் இரண்டே வெடித்துள்ளதாக இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. தாக்குதலுக்கு இலக்கான உழவு இயந்திரம் சில மீற்றருக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டது. இதன்போது அதில் இருந்த 6 இராணுவத்தினர் ஸ்தலத்தில் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மூதூரில் தொடரும் வன்முறை 3 முஸ்லிம்கள் சுட்டுக்கொலை

## பலரைக் காணவில்லை எனத் தகவல்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் தொடர்ந்து இடம் பெற்று வரும் வன்முறைகளின் எதிரொலியாக மூன்று முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமது வீடுகளில் இருந்து மாடுகள் வாங்குவதற்காக கடந்த சனிக்கிழமை இவர்கள் சென்றிருந்ததாகவும் இரவுவரை வீடுதிரும்பாத காரணத்தால் நேற்றுக் காலை இவர்களை தேடிச்சென்ற போது, மூவரும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சடலங்களாக இறால் குழிப் பகுதியில் கிடந்ததாகவும் மற்றையவர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர்களும் காயமடைந்தவரும் மாட்டு வியாபாரிகள் எனத் தெரியவந்துள்ளது. தோப்பூரில் ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர் காஜா முகைதீன் மீது துப்பாக்கிச் சூட்டுத்தாக்குதல் நடந்ததையடுத்து இந்த வன்முறைகள் வெடித்துள்ளன.

காஜா முகைதீன் மீதான துப்பாக்கிச்சூட்டின் எதிரொலியாக அவரது ஆதரவாளர்கள் நடத்திய தாக்குலில் மூன்று தமிழர்கள் நேற்று வாள் வெட்டுக்கு இலக்காகினர்.

இருவர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். இந்தத்தாக்குதலில் காயமடைந்த இராமலிங்கம் முதலில் திருமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.நேற்று அவர் கண்டி பொது வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண்கள் மீது நேற்றும் தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், இருபாலை,முத்திரைச்சந்திப்பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தினரின் காவலரண்கள் மீது நேற்று பிற்பகல் கிரனைட் தாக்குதல் இடம் பெற்றன.

இருபாலைச் சந்தியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது 3.30 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இராணுவவீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நல்லூர் முத்திரைச்சந்திப் பகுதியில் அமைந்துள்ள காவலரண் மீது நேற்று மாலை 4.30 மணியளவில் துப்பாக்கிப்பிரயோகம் இடம் பெற்றது.

இனந்தெரியாத இருவர் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை (12 ஆம் பக்கம் பார்க்க)

# வட–கிழக்கு வன்முறைகள் யுத்தத்திற்கான ஆரம்பம்

## கண்காணிப்புக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தொடரும் வன்முறைகள் யுத்தத்தை ஏற்படுத்தும் அபாய நிலையை உருவாக்கி வருகின்றன என்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்றூப் ஹொக்லண்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில்,வடக்கு– கிழக்கில் கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் வன் முறைகளில் பொதுமக்களும் படையினரும் காயமடைந்தும் கொல்லப்பட்டும் உள்ளனர்.

இந்த வன்முறைகள் அபாயகரமான சூழலை ஏற்றுடுத்துகின்றன.

தமிழர் பிரதேசத்தில் எண்ணிக்கையற்ற தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்த இடையூறுகளும் தாக்குதல்களும் அதிகரித்தால் பாதுகாப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ மினிமுகாம் மீது நீர்வேலியில் தாக்குதல்

## இராணுவச் சிப்பாய் பலி; ஊரடங்கு அமுல்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் இராணுவத்தினரின் மினிமுகாம் மீது நேற்று மாலை 6.10 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு இராணுவவீரர் உயிரிழந்துள்ளதாக இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை மினிமுகாமில் இருந்து இராணுவத்தினர் சுற்றுக் காவலுக்குப் புறப்பட்டபோது அடையாளம் தெரியாத நபர்களினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்து இராணுவத்தினரும் பதில்த்தாக்குதல் நடத்தியதால் சில நிமிட நேரம் இருதரப்புக்கும் இடையில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றுள்ளதாகவும் இதையடுத்து அப்பகுதியில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி.இடம் பெயர்ந்தனர்.இதனையடுத்துநீர்வேலி,புத்தூர்,அச்சுவேலி, சிறுப்பிட்டி ஆகிய பகுதி (12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


# படுகொலைகளின் மூலம் ஒருபோதும் தாயகத்துக்கான போரை நிறுத்தமுடியாது

## கோப்பாய் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

அப்பாவி பொதுமக்கள் மீதான படுகொலைகளை வன்மையாக கண்டிப்பதாகத் தெரிவித்து கோப்பாய் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழர் தாயகப் பகுதிகளில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தி நிலைகொண்டிருக்கும் சிங்கள அரசபடைகளினதும் அவர்களுடன் ஒட்டிக்கொண்டு இருக்கும் தேசவிரோத கும்பல்களினதும் அடாவடித்தனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

தமிழ் மண்பற்றாளர்களையும், ஆதரவாளர்களையும், எழுச்சி நிகழ்வுகளில முன்நின்று செயல்படுபவர்களையும், கல்விமான்களையும், தமிழ் மண் மீது பற்றுக்கொண்டு போராட்டத்துக்கு உந்துசக்தியாக விளங்கும பொது மக்களையும் இலக்கு வைத்து மிக கொடூரமான தாக்குதல்களை அணமைக்காலங்களில் அரங்கேற்றி வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக அண்மையில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வின்போது நீர்வேலி பகுதியில் அலங்கார வேலைகளை முன்னின்று நடாத்திய இளைஞர் ஒருவர் சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பரிவினராலும் அதனுடன் சேர்ந்து இயங்கும் தமிழ்தேச விரோத கும்பல்களினாலும் சுடப்பட்டு படுகாயமடைந்தது பலரும் அறிந்த விடயம். மீண்டும் இவர்கள் தமது அராஜகத்தை தொடர்ந்தவண்ணம் உள்ளார்கள்.

1.12.2005 அன்று நீர்வேலி பகுதியில் தமது அன்றாட கடமைகள் தொடர்பாக நண்பர்களுடன் உரையாடிக்கொண்டு இருந்த அப்பாவி இளைஞர்கள் மீது சிறிலங்கா கூலிப்படையினரும் அவர்களுடன் சேர்ந்த தமிழ் தேச விரோத கும்பல்களும் இணைந்து மிகவும் மிலேச்சத்தனமாக துப்பாக்கிச்சூட்டு தாக்குதலை நடாத்தினார்கள் இதில் இரண்டு இளைஞர்கள் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார்கள் இன்னொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்வாறான தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்கள் போராட்டத்தின் பால் ஈர்க்கப் படுவதை தடுக்கலாம் என்றும் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி தமிழா தாயக விடுதலைப் போரட் டத்தை நசுக்கி விடலாம் என்று அரசாங்கம் நப்பாசை கொண்டுள்ளது இந்த அற்ப ஆசை ஒரு போதும் நிறைவேறமாட்டாது என்பதை எதிரிக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றோம். இது நாம் உங்களுக்கு விடும் எச்சரிக்கையாக அமையட்டும்.

இவ்வாறான அடாவடித் தனங்களை தொடர்ந்து அரங்கேற்றுவீர்களானால் விளைவுகள் விபரிதமாக அமையும் புரிந்துணர்வு ஒப்பந்த உடன் படிக்கையின படி தமிழர் தாயக பிரதேசங்களில் நிலை கொண்டுள்ள ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் படிப்படியாக வெளியேற வேண்டும். மாறாக சிறிலங்கா இராணுவத்தினர் புதிய முகாம்களையும் காப்பரண்களையும் அமைத்து பொது மக்களின் அன்றாட வாழ்விற்கு குந்தகம் விளைவித்து வருகின்றனர். ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டம் அந்த இனத்தின் மக்களின் கைகளில் தான தங்கியுள்ளது. மக்கள் சக்தி மாபெரும் சக்தியாக உள்ளது என்பதை ந புரிந்துகொள் சிறிலங்கா இராணுவமே தமிழ் தேசவிரோத குழுக்களே உங்களின் அராஜகத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் மக்கள் திரண்டெழுந்து உங்களுக்கு எதிராக கைகளில ஆயுதம் ஏந்தும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதையும் இதற்காக எமது விடுதலைப் போராட்டத்தின் உந்து சக்தியாக உள்ள மக்கள்படைக்கட்டுமானம தங்களுககு தகுந்த பதிலடி கொடுக்கும் என்பதை தங்களுக்கு புரிய வைக்கும் காலம் வெகு தூரமில்லை.

“மக்கள் சக்தி மாபெரும் சக்தி
சீண்டி பார்க்க நினைத்தால்
மாண்டு போவாய்'' (த)

## ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிந்தனைகள் அமுல் படுத்தப்படுவதை அவதானிக்கும் ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் நிர்வாகச் சேவையைச் சேர்ந்தவாகளையும் அரசியல் துறையினரையும் உள்ளடக்கிய 24 உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் இந்த வாரத்தில் நியமிக்கப்படுவர் என்றும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழு சுதந்திரமான முறையல் இயங்குவதற்குகான தன்மையைக் கெண்டிருக்கும் என்றும் மேலும் தெரிவிககப்பட்டுள்ளது. (த-7)

# பிரதமர் பதவி பயனற்றது

## தத்துவம் பேசுகிறார் அனுரா

(கொழும்பு)

இலங்கையின் பிரதமர் பதவி பயனறறது. அது எனக்குத் தேவையில்லை என்று சுற்றுலாத்துறை அமைசசர் அனுரா பண்டாரநாயக்க கூறியுள்ளாா.

இது தொடர்பாக அனுரா பண்டாரநர்யக்க மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் பதவியை எனக்கு மஹிந்த ராஜபக்ஷ அளிப்பார் என்று நான எதிர்பார்க்கவில்லை நான் நடைமுறையை உணர்ந்தவன் முட்டாள் அல்ல.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் எனது பெயர்தான் பிரதமர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டது. இலங்கையின் வரலாற்றிலேயே முதல் முறையாக கட்சியின் மத்தியக்குழு பரிந்துரைத்த நபர் அல்லாத வேறு நபருக்கு பிரதமர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு மீண்டும் மத்திய குழுவில்தான் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் அது நடக்கவில்லை.

ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை பிரதமராக நியமித்ததில் எனக்கு வருத்தம் இல்லை யாராக இருந்தாலும் பிரதமர் என்பவா பயனற்றவர். வாகன வசதிகளோடு ஆடம்பரமாகச் சென்று திறப்பு விழாக்களுக்கும் ஆலயங்களுக்கும் செல்லத்தான் அந்தப் பதவி பயன்படும். அந்த வகையான பதவியை நான் விரும்பவிலலை. அதிகாரத்துடன் இயங்கக்கூடிய பதவிதான் நான் விரும்புவது.

எனக்கு சுற்றுலாத்துறை ஒதுக்கப்பட்டதிலும் நான் மகிழ்ச்சி அடைகிறேன் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுககு எதிராக நான் செயற்படவிலலை கம்பஹாவில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் மஹிந்த வெறறி பெறுவார் என்று அவரிடம் உறுதியளித்திருந்தேன். அதுதான் நடந்துள்ளது.

ஜாதிகஹெல உறுமய ஜே.வி.பியின் பொருளாதாரக் கொள்கைகளும் சிறுபான்மையினருக்கு எதிரான பேச்சுகளும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாததை இதுதான் மஹிந்தவின் தேர்தல் பிரசாரத்தில் என்னை முழுமையாக ஈடுபடவிடாமல் தடுத்தது.

ஒருகாலத்தில் ஜே.வி.பி.யை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைத்தது நான்தான்.

ஆனால் அவர் கள் எப்போது ராஜபக்ஷ அமைசசர வையிலிருந்து விலக முடிவெடுத்தார்களோ அப்போதே எனக்கும் ஜே.வி.பிக்குமான உறவு முறிந்து போய்விட்டது. பாராளுமன்றத்திற்கு சந்



திரிகா மீண்டும் வருவாரா என்பது குறித்து எனக்குத் தெரியாது. ஆனால் அது தொடர்பில் முன்பு என்னோடு கதைத்திருக்கிறார்.

தேர்தல் முடிவுகள் வெளியான மறுநாள் வரைதான் அவருடன் தொடர்பில் இருந்தேன். இதன் பினனர் அவரை தொடர்புகொள்ளவில்லை சாதாரணமாக தொலைபேசியில் பேசுவதை சந்திரிகா தவிர்ப்பாா. அது பாதுகாப்பற்றது என்றும் கருதுபவர் அவர். அதனால் அவரை நேரில் தான் சந்திக்க வேண்டும். அவரைச் சந்திப்பதற்கு காத்திருக்கவேண்டும்.

தென்னிலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளை இனப்பிரச்சினை தொடர்பாக பெறுவதைவிட அரசாங்கம் முதலில் தனது கொள்கையை வெளிப்படுத்த வேண்டும். அதனடிப்படையில் ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும். தென்னிலங்கையின் லங்கா சம சமாஜக்கட்சி மற்றும் கம்யூனிஸ்ட்கட்சிகளின் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கைகள் நல்ல முற்போக்கானவை என்றார். (த)

## இராசி பலன்

05.12.2005
(கார்த்திகை 20, திங்கட்கிழமை)
சதுர்த்தி பிற்பகல் 2.23 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 7.07 மணிவரை
இராகுகாலம் 7.46-9.16 மணிவரை
சுபநேரம் 12.16-01.46 மணிவரை
சதுர்த்தி விரம்
3ஆம் சோமவாரம்

| | |
|---|---|
| மேடம் | கடினமுயற்சி, அதிகாரம், போசனசுகம், தூரதேசச்செய்தி. |
| இடபம் | புதிய திட்டமிடல், தந்தைவழி உறவு, காரிய தாமதம், இடமாற்றம். |
| மிதுனம் | வண் பிரச்சினை, முயற்சி தடங்கல், ஆரோக கியக்குறைவு, திடீர் நன்மை. |
| கடகம் | செல்வாக்கு, முயற்சி கைகூடும், தெய்வ நம்பிக்கை, போசனசுகம். |
| சிங்கம் | தேகநலன், தடைப்பட்ட காரியம் கைகூடும, நல்ல செய்தி, மனமகிழ்ச்சி. |
| கன்னி | வியாபார சிந்தை, ரோகநிலை, தன்னம் பிக்கைக்குறைவு, பணவிரயம். |
| துலாம் | மாதா சுகம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ் சலம், எடுத்த கருமங்கள் தாமதமாகும். |
| விருச்சிகம் | அன்னியர் சந்திப்பு, சுபநிகழ்வு, காரிய அனுகூலம், போசனசுகம். |
| தனுசு | அதக செலவு, உணர்ச்சிவசப்படல், முயற்ச தாமதம், பிரயாணம். |
| மகரம் | பெரியோர் உதவி, நல்ல முயற்சி, தெய்வ சிந்தை, போசனசுகம். |
| கும்பம் | பிரயாணம், அமைதிக்குறைவு, மனஸ்தாபம், காரிய தாமதம். |
| மீனம் | குடும்பசுகம், போசன நன்மை, செய் தொழில விருத்தி, காரிய சித்தி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## உயர் நீதிமன்றம் தலையிட முடியாது

பொலிஸின் பதவி உயர்வுகளில் ஏற்படும் சிக்கல் தொடர்பில் உயர் நீதிமன்றம் தலையிட முடியாது என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். பொலிஸ் பரிசோதகர் தரத்திலான பதவி உயர்வுகளில் தமக்கு பதவி உயர்வு வழங்கப்படவிலலை எனக்கோரி உப பொலிஸ் பரிசோதகர்கள் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே நீதியரசர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் பதவி உயர்வுகள் மற்றும் இடம் மாறறங்கள் தொடர்பிலான பிரசசினைகள் பொலிஸ ஆணைக்குழுவிடமே முறைப்பாடு செயற்படவேண்டுமென்று தெரிவித்துள்ளார். அவர் எந்த சந்தர்ப்பத்தை தவிர்த்து அதிகாரிகள் நீதிமன்றத்தை நாடுவதாகவும் தெரிவித்துள்ளார். (த-9)

## உரம் விலைக்குறைப்பு

விவசாயிகள் 350ரூபாவிற்கு உரத்தைக் கொள்வனவு செய்யமுடியும் என 'மஹிந்த சிந்தனை' மூலம் அளிக்கப்பட்ட வாக்குறுதி இன்று நிறைவேற்றப்படுகிறது.

குறைந்த விலையில் உரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகள் படிவம் ஒன்றை நிரம்பிக் கொடுக்க வேண்டும். விவசாய அமைச்சு இந்தப் படிவங்களை விவசாயிகள் சமூகங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பிவைக்கும். உரத்தைக் குறைந்த விலையில் விற்பனை செய்வதனால் அரசாங்கத்திற்கு 120கோடி ரூபா நஷ்டம் ஏற்படுகின்றது. என்று அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எனினும், உரவிலைக்குறைப்பினால் விவசாயிகள் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று நம்பப்படுகிறது. இந்த உரமானியம் எதிர்காலத்தில் பழக்செய்கையாளர்களுக்கும், காய்கறி செய்கையாளர்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-7)

## 'மஹிந்தவின் சிந்தனை' அடிப்படையில் நகரஅபிவிருத்தி

மஹநதவின் சிநதனையை அடிப்படையாகக் கொணடு இலஙகையின் அனைத்து நகரஙகளுக்கும தேவையான வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை ஏற்படுத்தப்படுமென நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் பிரதியமைச்சர் ரோகன திஸாநாயக்க தெரிவித்துள்ளர்.

இந்த நகரங்கள் 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்ற வகையில் சகலவசதிகளுடனும் அபிவிருத்தி செய்யப்படும்.நாட்டின் பிரதான நகரங்களைப் போன்றே ஏனைய நகரங்களுக்கும் குடிநீர் வசதிகள் மற்றும உடகட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் மேலும தெரிவித்தார். (த-9)

# பொதுத் தேர்தலுக்கு ஜே.வி.பி எதிர்ப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலை நடத்த ஜே.வி.பி எதிர்ப்புத் தெரிவித்துவருகிறது. ஜனாதிபதியாகத் தெரிவானதைத் தொடர்ந்து பாராளுமன்றில் பெரும்பான்மையை உருவாக்கும் வகையில் பாராளுமன்றத் தேர்தலை நடத்த மஹிந்த ராஜபக்ஷ முயன்று வருகிறார்.

மஹிந்த ராஜபக்ஷவினது இந்த நடவடிக்கையை ஜே.வி.பி. கடு மையாக எதிர்த்துவருகிறது. பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி அதில் வெற்றிபெற வேண்டியது அவசியம் என்று அக்கட்சி வலியுறுத்தி வருகிறது.

உள்ளாட்சி அமைப்புக்களில பெரும்பான்மை இடங்களை தற்போது ஐக்கிய தேசியக் கட்சி தம்வசம் வைத்துள்ளது. இந்த நிலையை மாற்றி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அதிக இடம்பெற்று மஹிந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளை கீழ்நிலை வரைக்கும் கொண்டு சென்ற பின்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்தலாம் என்றும் ஆலோசன்னை கூறிவருகிறது. இருப்பினும் அடுத்த ஆண்டு மத்தியில் சிறிலங்கா பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான திட்டமிடல்களை ராஜபக்ஷ மேற்கொண்டுவருவதாக மஹிந்த ஆதரவாளர்கள் கூறி வருகின்றனர். (த)

# இறுதிப்போருக்கான வேளை நெருங்குகிறது! தமிழர்கள் செய்ய வேண்டியது என்ன?

## விளக்கமளிக்கிறார் கா.வே. பாலகுமாரன்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் போருக்கான இறுதிவேளை நெருங்கும நிலையில் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழ்கினற தமிழர்கள் செய்ய வேண்டியது என்ன என்பது குறித்துத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் விளக்கமளித்துள்ளார்.

புலிகளின் குரல் வானொலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசியல் அரங்கம் பகுதியில் கா.வே. பாலகுமாரன் ஆற்றிய உரையில் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

பிரபாகரனது மாவீரர் நாள் உரை எப்படியான தாக்கத்தை சர்வதேச அரங்கில் ஏற்படுத்தியுள்ளது? பயங்கரவாதம்- தொழில்நுடபம் என விரிந்த இந்தக் காலத்திலே நடைபெறுகிற ஒரு விடுதலைப் போராட்டம் எவ்வாறு முகம் கொடுத்து நிற்கிறது? இதை சர்வதேச சமூகம் எப்படி எதிர்கொள்ளும்? சிங்களதேசம் மேற்கொள்ளப்போகும் சதிவலைகள் என்ன? சதிவலைகளை தாயகம மற்றும் புலம்பெயர் தமிழர்கள் எப்படி எதிர்கொள்வது? என்பது உள்ளிட்ட விடயங்களை பாலகுமாரன் தனது உரையில் விளக்கியுள்ளார்.

அவரது உரையின் விரிவாக்கம், மாவீரர் நாளில் ஏதோ புதிய பூகம்பம் வெடிக்கப் போகிறது என்று கூறப்பட்ட எதிர்பார்ப்பிற்கு அப்பால மீண்டும் வித்தியாசமான ஒரு சூழல் மாவீரர் நாளுக்கு பினனர் ஏற்பட்டுள்ளது. இது வரை நிகழ்ததப்பட்டது போன்ற மாவீரா நாள் உரை அல்ல அது.நம்பிக்கைககுரிய ஒரு பொறுப்பாளரின் உரை எனறு அதனை சுருக்கமாகக் கூறலாம். தமிழீழ மக்களுக்கு என்பதை விட சிங்கள தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை அது.

காரல் மார்க்ஸ் பொதுவுடமைக் கட்சியை உருவாக்கிய காலகட்டங்களில் வினா-விடையை வெளியிட்டது தலைவரின் மாவர்ர் நாள் உரையானது எல்லாவித கேளவிகளுக்குமான விடையை தன்னகத்தே கொண்டுள் ளது.

உண்மையில் அந்த உரை என்பது பட்டயம் போல்,பிரகடனம் போல் ஆகிவிட்டது.

உரைக்கு பின்னால் என்ன நிகழப்போகிறது, என்ன திசையில் செல்லப்போகிறது என்பதற்கான அறிகுறிகள் இப்போதே தென்படுகின்றன.

நாங்கள் முன்னர் கூறியது போலவே தமிழீழத்தில் அரங்கேறுகின்ற ஒவ்வொரு பெரிய காட்சியும் ஒரு ஒத்திசைவை அல்லது பின்னாடி நிகழப்போகும் சம்பவங்களுக்கு முன்னோடி போல்- நிகழ்தகவு போல் தமிழீழ மக்களுக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் ஒரு வித்தியசமான செய்தியைக் கூறிவருகிறது.

தேர்தலுக்கு முன்பாக அல்லது தேசியத்தலைவரது உரைக்கு முன்பாக சிங்களத்திலே என்ன குதியாட்டம் நடந்தது... ஆனால் இப்போது சிங்களத்திலேயே ஒரு பேச்சையும் காணோம். மூச்சையும் காணோம். எல்லோரும் மௌனித துப்போய்விட்டார்கள். அந்த அளவுக்கு 'இந்த உரையினது தாக்கம், நீண்டகாலத்திற்கு வேலை செய்யும் வகையிலேயே அமைந்துள்ளது.

எல்லோருடைய மனச்சாட்சியையும் மனதையும் இறுகப் பிளக்கும் பாறையைப்போல் பிளந்து அவர்களுக்கு உள்ளே சென்று மனச்சாட்சியையும் மனதையும் குளப்பும் வகையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

எல்லோரும் எதிர்பார்த்தார்கள்... மஹிந்த வந்தவுடனேயே ஏதோ பெரிதாய் செய்யப்போகிறாா என எதிர்பார்த்தார்கள். முன்னர் இருந்த தலைவர்களைப் போலவே சிங்களப் பெருந்தேசிய இனவாதத்துக்கு தீனிபோடவும் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள சமநிலையைப் பேணுகிற வகையிலுமாக அறிக்கைகளை வெளியிட முற்படும் வகையிலும் இருப்பினும் எங்களது செயற்பாடுகள் இன்று மஹிந்தவுக்கு ஒரு சிக்கலைக் கொடுத்திருக்கிறது என்று நம்புகிறோம்.

அவர் நினைத்திருந்தால் இவ்வளவு கடுமையான நிலைப்பாடுகளை மேற்கொண்டதற்கு பின்னால் புலிகளை சீண்டி, சமநிலையைப் தவறச் செய்து சிக்கலான சூழலை உருவாக்கி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒட்டுமொத்தமாக ஒடுக்கியிருக்கலாம்.

ஆனால் மிக குறுகியதும் நீண்ட ஆழமானதுமான வல்லுநரின் ஆராய்ச்சியிலேயே உருவாக்கபபட்ட மஹிந்தவின் சிந்தனைகளோ இன்று சிதறடிக்கப்பட்டிருக்கிறது.

இன்று தலைவரது உரைக்குப் பின்னால் அதை வழிமொழிந்து பின்பற்றி நடக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை மஹிந்தவுக்கு ஏற்பட்டுள்ளது.

அதுபோலவே ஜே.வி.பியும் தான் தேசியத் தலைவரது உரை அவர்கள் அனைவருக்குமே சாட்டையடியாக இருக்கிறது.

ஜே.வி.பியினது உபாயங்களும் உத்திகளும் தூக்கி ஏறியப்பட்டிருப்பதால் அது தட்டுத் தடுமாறிக்கொண்டிருக்கிறது. இப்போது ஜே.வி.பிக்கும் மஹிந்தவுக்குமான உறவுகள் முட்ட வேண்டிய காலம் தோன்றிவிட்டது. தலைவரின் உரையூடாக சிங்கள தேசம் மட்டுமல்ல உலகமே இன்று கலகலத்துப்போய்விட்டது.

தமிழ் மக்கள் சிங்களத் தேசம் என்பதற்கு அப்பால் சர்வதேச கொள்கை வகுப்பாளர்களை நோக்கி எழுதப்பட்டதாக அவரது உரை அமைந்துள்ளது.

உலக வரலாற்றில் குடியேற்ற காலகட்டத்தைத் தாண்டி, உலகப் போர்களைத்தாண்டி, பனிப் போர்களைத் தாண்டி ஒவ்வொரு காலகட்டத்திலும் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களுக்கு பொதுவான தன்மைகள் இருந்தன. ஆனால் இந்தப் புதிய ஒழுங்கிலே நாம் செயற்படுகின்ற விதம் பார்த்து உலகமே மிகப்பெரிய திகைப்புக்குள்ளாகி இருக்கிறது. எங்களை எந்த வழியிலும் எந்த நுணுக்கத்திலும் சென்று கையாள முடியாது என்ற நுணுக்கமான நிலைப்பாட்டை தேசியத்தலைவர் உருவாக்கியுள்ளார்.

தலைவர் கூறியதில் முக்கியமானது என்பது 'குறுகிய கால இடைவெளி' என்பது. இந்த குறுகிய கால இடைவெளி என்ற சொல் மிகப்பெரிய இடைவெளியை நீண்டகாலத்திற்கு சிங்களத் தலைமைக்கும், சர்வதேசத்திற்கும் கொடுக்கப்பபோகிறது. என்று நினைக்கிறேன்.

இந்த உரையானது சர்வதேச ரீதியில் அறிவார்ந்த ஒரு விடுதலைப்போராட்டத்தினது உச்சமான வெளிப்பாடாக இருக்கிறது.தேசியத் தலைவரது உரையை எவரேனும் கண்டனம் செய்திருக்கிறார்களா? ஒரு கண்டனமும் கூட தெரிவிக்க இயலாதவகையிலேயே ஒரு விடுதலைப்போராட்டத்தின் வெளிப்பாடாக தலைவரின் மாவீரர் நாள் உரை அமைந்துள்ளது. தலைவரின் உரையூடாக நிகழப்போகிற விபரீதங்கள் அல்லது மாற்றங்கள் என்பன மெல்ல மெல்ல உலகத்திறகு உரக்கத் தொடங்கியிருக்கிறது. அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதை அறியமுடியாமல் தயங்கி,தயங்கி நிற்கிறார்கள் இப்போது இந்திய மாநாடு, இணைத்தலைமை நாடுகளின் மாநாடு, சொல்ஹெய்ம் மாநாடு என்று கூட்டப்பட்டு வருகின்றன... தலைவரது உரைக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது சர்வதேசத்திற்கு உள்ள சிக்க லாக இருக்கிறது. இப்படியான ஒரு சிக்கலான சூழ்நிலையை உருவாக்குவதனூடாகத் தான் எமது விடுதலைவென்றெடுக்கப்படும் என்பது தெளிவான செய்தி.

செபரெம்பர் 11தாக்குதலுக்குப்பின்னால், ஈராக் படையெடுப்புக்குப் பின்னால் புலிகள் எவ்வாறு முகம் கொடுக்கப் போகிறார்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். பயங்கரவாதத்திறகு எதிராக ஒரு வருடத்திற்கு அமெரிக்கா செலவழிக்கிற தொகை 450 பில்லியன் டொலர். இந்தத் தொகையில் 15இல் ஒரு பங்கு டொலரினால் உலகத்தின் வறுமைப்பிரச்சினைக்கு தீரவு கண்டுவிடலாம்.

இப்படியான அச்சத்தை உற்பத்தி செய்கின்ற ஒரு கால கட்டத்தில் முதன் முறையாக தனியனாக எவருடைய முன் உதாரணமும் அற்று எங்களுடைய விடுதலைப்போராட்டம் முகம் கொடுத்துள்ளது. புதிய உலக ஒழுங்கினது 2ஆம் கட்ட நிகழ்ச்சி நிரலுக்கு நேரடியாக முகம் கொடுக்கிற வகையில் இனி வரும் சம்பவங்கள் அமையப் போகிறது. நாங்கள் அதற்கான வழிமுறை வகுத்திருக்கிறோம. எவ்வாறு வகுத்திருக்கிறோம் எனில் எது பயங்கரவாதம்? எங்களுடைய நிலை என்ன? எவ்வளவு காலம் நாங்கள் பேசியிருக்கிறோம்? எங்களுடைய உட்பொருள் என்ன? என எல்லாவற்றையும் விளக்கியுள்ளோம்.

இதனூடாக எங்களைக் கையாள இனி உலகம் ஏதேனும் புதிய உத்திகளைக் கையாளுமா எனபது குறித்து எதுவும் தெரியாது. ஏனெனில் இதுவரை உலகம் கடைப்பிடித்த உத்திகள் அனைத்துமே உச்ச உத்திகள் தான். ரஷ்ய புரட்சி, சீன விடுதலைப்போராட்டம், கியூபா விடுதலைப்போராட்டம்,வியட்நாம் விடுதலைப்போராட்டம் போன்ற கால கட்டங்களில் உலகத்திலேயே எப்படி மிகப்பெரிய சூழல் உருவானதோ உலகத்திலே மிகப் பெரிய அதிசயமும் உருவானதோ அதைப்போல் இப்போதும் அதாவது, தொழில்நுட்பம் வளர்ந்து உலகம் சுருங்கி ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் வேறுவிதமாக மாற்றப்படடு எது புரட்சி? எது கிளர்ச்சி என்று தெரியாத அளவிறகு நாடுகள் எல்லாம் தலைகீழாக மாறி எல்லைகள் எல்லாம் சுருங்கி இருக்கிற இந்தக் காலகட்டத்தில் முதன் முறையாக புதிய பாதையை இந்த உரையூடாக உலகத்திற்குக் காட்டியிருக்கிறோம்.

அதேநேரத்தில் மஹிந்தவின நல்லெண்ணத்தை வெளிப்படுதத ஒரு வாய்ப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இராஜதந்திரப் போரிலே பயன்படுத்த வேணடிய உத்திகளையும் இந்த உரையில் இருப்பதை நீங்கள் பார்க்கலாம். இதற்கு அப்பால் மாவர்ர நாள் உரையை நீங்கள் பார்த்தால்... முதலில் முடியாது என்றும் இடையில் முடியுமா என்று பார்ப்பதாகவும் இறுதியில் முடியாது என்று முடிந்திருக்கிறது. அப்படியானால் மஹிந்தவின் காலத்தை நாம் எப்படி அணுக வேண்டும்? இதுதொடர்பான பார்வை எங்கள் மக்களிடையே எவவாறு இருக்கவேண்டும். என்ற கருத்துப்பரிமாற்றங்கள் செய்ய வேண்டிய காலமாக அமைகிறது.

மஹிந்த முதலில் என்ன செய்யப்போகிறார் எனில் மிக இரகசியமான ஒரு சதிவலைப்பின்னலை மிக இரகசியமாக செய்யப்போகிறார்.ரணில் இதனை பகிரங்கமாக செய்தார்.

மஹிந்த தன்னிடம் உள்ள முஸ்லிம் கைக்கூலித்தலைமைகளையும் தமிழத் துரோகக் குழுக்களையும் வைத்து எங்கள் தமிழீழப் பகுதிகளிலேயே குறிபபாக தென்தமிழீழத் திலே முஸ்லிம் -தமிழ் உறவு களுக்கு இடையேயான ஒற்றுமையை சிதைக்கக்கூடிய செயற்பாடுகள போன்ற சதிப்பின்னலை ஒரு பக்கமாகவும், உலக நாடுகளில் தங்களது செயற்பாடுகளை விரிவடையச் செய்து சில முறைகளை கையாண்டு பயங்கரவாதி என எம்மை சொல்ல வைக்கிற நிலையை உருவாக்கி சதிவலைப்பின்னலை ஒரு பக்கமாகவும் பின்னக்கூடும்.

இதை மஹிந்த செய்யாவிடடால அவர் ஒருநாள் கூட பதவியில இருக்கமுடியாது. ஜே.வி.பியினர் ஒருநாளும் அவரை பதவியில் இருக்க விடமாட்டாகள்.

இந்தச் சூழலில் தமிழீழ மக்களும் புலம்பெயர் தமிழ் மக்களும் தமிழீழத்தலைமையினது நிலைப்பாட்டை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏதோ ஆறப்போடப்பட்டு இருக்கிறது. கஞ்சி ஆறியபின்னர் குடிக்கலாம் என்று நாம் நினைக்கவில்லை. நாங்கள் சர்வதேசத்திற்கு கூறும் செய்தி வேறு. எங்கள தாயகத்திலேயே வாழ்கிற மக்களுக்குக் கூறும் செய்தி.

தமிழீழத்திலே இப்படியாக வருகிற இந்தச் சிக்கலைப் புரிந்து கொண்டு நம்முடைய ஒற்றுமையை நாம் வளர்த்தெடுக்க வேணடும். புலம்பெயர் நாடுகளிலேயே வாழ்கிற தமிழர்கள் செய்ய வேண்டியது, தலைவரது உரையூடாக அம்பலப் படுத்தப்பட்டிருக்கும் சிங்களத்தை முழுமை யாக அம்பலப் படுத்தும் சகல செயற்பாடுகளையும் முழு அளவில தொடர்ந்து விரைந்து செய்ய வேணடும வியட்நாம் விடுதலைப் போராட்டத்தில் 10 வருடம் பேசினார்கள். அதற்கு அப்பாலும அவர்கள் போராடி வென்ற போது கடைசியாக கூறினார்கள். இந்த பேச்சுவார்த்தை -இராஜதந்திரம்-அரசியல் நிலைப்பாடுகள் என எல்லாமே இராணுவ ரீதியான வெற்றிக்குத் துணைக் காரணியாக செயற்பட்டது என்று தெரிவித்தார்கள். தாயகம் மற்றும் புலம்பெயர் வாழ் தமிழ்மக்களே காலம கனிந்துவிட்டது. இன்னொரு போருக்கான இறுதி வேளை நெருங்கிவிட்டது அதை வெலல நாம் ஆயத்தமாக வேண்டியிருக்கிறது. இந்தப் போர்க் களங்களில் மட்டுமல்ல... களங் களிலும் மனங்களிலும் செய்யப் படவேண்டிய போர். இந்தப் போரானது எல்லா முனைகளிலும் ஒருமித்து செயற்படக்கூடிய போராக மாறும். அதுவே விடுதலைப் போராட்டத்தின் கடைசி நாளாக அமையும். அந்த நாளில் நம் வெற்றிக்கொடி ஏறுவதைப் பார்ப்பதற்காக நாம் எல்லோரும் காத்திருக்கிறோம் என்றார். (த)

# வீட்டுத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டல்

(கொழும்பு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் சுனாமியினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் வாழும் மக்களுக்கான நிரந்தர வீட்டுத் திட்டத்துக்கு நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

முதலாவது அடிக்கல்லினை பயனாளி ஒருவரது மகன் சிவலிங்கம் சுகந்தனும் இரண்டாவது அடிகல்லினை வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்பழகனும மூன்றாவது அடிக்கல்லினை சேவாலங்கா நிறுவனத்தின் திட்ட முகாமைத்துவர் கேசவனும் நான்காவது அடிக்கல்லினை திட்ட ஒருங்கிணைப்பு செயலகத்தின் பிரதிநிதி ஒருவரும்,ஐந்தாவது அடிக்கல்லினை வடமராட்சி, வடமராட்சி கிழக்கு மாவீரர் பணிமனை செயலாளர் தமிழரசனும் நாட்டினார்கள்.மேலும் 137 வீடுகள் சேவாலஙகா நிறுவனத்தினால் கட்டிக்கொடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-23)

# கையடக்கத் தொலைபேசிக்குத் தடை

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத் தினால் நடாத்தப்படும் பொதுப் பரீடசை கள் மற்றும் ஏனைய பரீட்சைகள் இடம் பெறும் பரீட்சை மண்டபங்களுக்குள் எந்தக் காரணம் கொண்டும் பரீட்சார்த்திகள் கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டு செல்லக்கூடாது என்று பரீட்சைத் திணைக்களம் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்தப் பரீட்சகைள் இடம்பெறும் வேளையில் பரீட்சை மோசடிகளில் ஈடுபட கையடக்கத் தொலைபேசிகள் பயன்படுத்தப்படலாம் என்பதாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அறிவுறுத்தல்களை மீறி செயறபடும் பரீட்சார்த்திகளுக்கு எதிராக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஏ.சி.முகமட் தெரிவித்துள்ளார். (த-7)

## இன்று ஒரு தகவல்

# கொல்லாமை

எந்த உயிரையும் அதனுடலிலிருந்து பிரிவதற்காக செயற்படாமலிருப்பதே கொல்லாமை எனப்படும். இக் கொல்லாமையே அறச்செயல்கள் எல்லாவற்றிலும் மேன்மையானதாகும். இந்த நல்லறத்தை இறுதிவரை கடைப்பிடிக்க வேண்டுமாயின் தன்னுயிர் பிரியும் சந்தர்ப்பம் வந்தாலும் பிறிதோர் உயிரைக் கொல்லாமலிருப்பதே நல்லதென அறநெறிகள் கூறுகின்றன.

இதையெல்லாம் அறிந்துகொண்டும் நம்மிற் பலர் என்ன செய்கிறார்கள்? உணவிற்காக எத்தனை ஆயிரம் உயிர்களைக் கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். இப் பாவச் செயலைத் தடுப்பது எப்படி? நாமே இதைப் பற்றிச் சிந்திப்பதில்லை? ஒரு உயிர் இருந்த உடலின் துர்நாற்றம் வீசும் தசையை உண்பது அருவருப்பானதே என்பதை உணர்ந்து தவிர்த்துவிடலாம் தானே.

இதென்ன ஆச்சரியமான சிந்தனை...? இன்று நம் நாட்டிலும் சில வெளிநாடுகளிலும் எத்தனை மனித உயிர்கள் தினமும் படுகொலை செய்யப்படுகின்றன. இதைப் பற்றிச் சிறிதேனும் சிந்தியாது உணவிற்காகக் கொலை செய்யப்படும் உயிரினங்களைப் பற்றி அனுதாபப்பட வேண்டுமா? என்று கேட்கிறீர்களா...?

உண்மைதான். இன்றைய உலகின் சில நாடுகளில் இனத்தால், மதத்தால், மொழியால் வேறுபட்ட நிலையில் தங்கள் உரிமைகளை அடைவதற்காகவும் தன்னாதிக்கமே மேலோங்க வேண்டுமென்ற ஆணவப் போக்கினாலும் போர் வெறி கொண்டு பல மனித உயிர்களைப் பலியாக்குகிறார்கள்.

இதற்கு உறுதுணையாக விஞ்ஞானத்தின் உச்ச வளர்ச்சியில் நிற்கும் பல நாடுகள் நவீன ஆயுதங்களையும் சக்தி வாய்ந்த குண்டுகளையும் அதிவேக யுத்த விமானங்களையும் உற்பத்தி செய்து வருகின்றன. இத்தகைய நவீன படைப்புக்களும் ஒரு கணத்தில் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைப் பலியெடுப்பதற்குத் தயங்குவதில்லை.

இறைவனாற் படைக்கப்பட்ட உயிரைப் பறிப்பதற்கு எந்த மனிதனுக்கும் உரிமையில்லையென்றே சைவசித்தாந்தங்கள் கூறுகின்றன. இதை மீறுவோருக்கு பலவிதமான தண்டனைகள் இருப்பதாகவும் கருதப்படுகிறது.

இதை உணர்த்தும் நண்பர் ஒருவரின் அபிப்பிராயத்தைப் பார்ப்போம். எனது நண்பர் ஒருவரை சில வருடங்களுக்குப் பின் சந்தித்தேன். அவரைப் பார்த்தவுடன் எனக்குப் பெரிய அதிர்ச்சியாகிவிட்டது. அவரின் இரு கைகளும் மெலிந்து எலும்பும் தோலுமாகக் காணப்பட்டது. ஆனால் உடலோ எந்தவித குறைபாடுகளுமில்லாமல் ஆரோக்கியமாகவே இருந்தது. நான் அவரை அனுதாபத்துடன் நோக்கியவாறு கேட்டேன் "கைகளுக்கு என்ன நடந்தது?" என்று.

அவரும் சோகமாகப் புன்னகைத்தபடி சொன்னார். "எனது தோட்டத்தில் குரங்குகள் அடிக்கடி வந்து பெரியளவில் அழிவுகளை ஏற்படுத்தின. நானும் பல வழிகளாலும் அவைகளைக் கட்டுப்படுத்த முயன்றும் பலனளிக்கவில்லை. இதனால் துப்பாக்கியைப் பயன்படுத்தி ஒரு மரத்திலிருந்த பெரிய குரங்கொன்றுக்குச் சுட இலக்குவைத்தேன். அப்போது அது தன்னைச் சுடவேண்டாம் என்ற மாதிரி தன் கையை அசைத்துக் காட்டியது. நானதைப் பொருட்படுத்தாமற் சுட்டேன். அவ்வளவுதான் கத்திக்கொண்டு கீழே விழுந்து இறந்துவிட்டது. இதை ஏனைய குரங்குகளும் பார்த்துக்கொண்டு ஓடிவிட்டன.

அன்றிலிருந்து எனது கைகள் படிப்படியாகச் செயலிழக்கத் தொடங்கின. இதைச் சுகமாக்குவதற்காக எத்தனையோ வைத்திய நிபுணர்கள் முயற்சி செய்தும் பயனளிக்கவில்லை குரங்கு சாபமிட்டால் அதற்கு மாற்று மருந்தேயில்லையாம்" என்றார் நண்பர்.

இதைக் கேட்ட நான் "குரங்கினத்திற்கு இருக்கிற சக்தி மனித இனத்திற்கு இல்லையா? இன்றைய உலகில் தினமும் எத்தனை மனிதர்களை துப்பாக்கியாற் சுட்டும் குண்டுகளை வெடிக்க வைத்தும் கொலை செய்கிறார்கள். இக் கொலையாளிகளுக்கு சாபதோஷமொன்றுமில்லையா...?" என்று கேட்டபோது "ஏன் இல்லை...?" என்று நண்பர் தொடர்ந்தார்.

மனிதர்களைக் கொலை செய்பவர்களின் மனமே அவர்களைச் செயலிழக்கச் செய்துவிடும். இத்துடன் அவர்கள் குடும்பமுமே அழிந்தது மாதிரித்தான். இவர்களுக்கு இனிமேல் மனிதப் பிறவியும் கிடைக்கமாட்டாதென்று புராணக் கதைகள் கூறுகின்றன. இத்தகைய பின்விளைவுகளைத் தரும் பாவத்துக்குரிய கொலைகள் தொடர வேண்டுமா...? இன்று நடைபெறும் யுத்தங்கள் வருங்காலத்திலாவது நிகழாமலிருப்பதற்கு ஆயுத உற்பத்தியை நிறுத்துவதற்கு சர்வதேசமும் இணைந்து ஒரு முடிவுககு வரலாம்தானே. இது இப்போதைக்குச் சாத்தியப்படாதென்பதினால் யுத்தத்தின் மூலம் அதிக உயிரிழப்புகளைத் தடுப்பதற்கு விஞ்ஞானத்தில் முன்னணி வகிக்கும் நாடொன்று புதிய சாதனமொன்றைத் தயாரித்து விற்பனை செய்ய இருக்கிறதாம். உருவத்தில் அது மிதிவெடி போலத்தான் . அதனுள்ளே ஒரு வகை அமிலவாயுக் கலவை இருக்கும். ஆயுததாரிகள் நடமாடும் இடங்களில் அதைப் புதைத்து விட்டால் அவர்கள் மிதித்தவுடன் அதனுள்ளிருக்கும் வாயு கசிந்து அவர்களிடமிருக்கும் எந்த வகைகயான ஆயுதங்கள் என்றாலும் சரி சற்று உருகிய நிலையில் செயலிழக்கச் செய்துவிடுமாம்? என்றார் நண்பர்.

இனிமேல் எந்த நாட்டிலென்றாலும் அதிகளவில் மனிதக் கொலைகள் நடக்காதென்று நினைக்கும் போது சந்தோஷம் வருகிறதல்லவா?

எழுதுமட்டுவாளூர்
**எஸ்.எஸ். காசிப்பிள்ளை**

# இராணுவ அதிகாரிகளின் ஓய்வு பெறும் வயது நீடிப்பை இரத்துச் செய்தார் மஹிந்த

(கொழும்பு)

முப்படையைச் சேர்ந்த அதிகாரிகளின் ஓய்வு பெறும் வயதை நீட்டித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பிறப்பித்திருந்த உத்தரவுகளை புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 28ஆம் திகதி இரத்துச் செய்துள்ளார்.

இராணுவ அதிகாரிகளின் ஓய்வு பெறும் வயதெல்லையை 2005.10.25ஆம் திகதியில் இருந்து மாற்றம் செய்து 1416/11 இலக்க வர்த்தமானி அறிவித்தலை சந்திரிகா வெளியிட்டிருந்தார். எனினும் அந்த உத்தரவை இரத்துச் செய்த மஹிந்த ராஜபக்ஷ,2005.11.28ஆம் திகதி 1416/11இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

சந்திரிகா வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய இராணுவ ஜெனரல் மற்றும் லெப்டினன் ஜெனரல் பதவிகளுக்கான ஓய்வுபெறும் வயது 60வரையும் மேஜர் ஜெனரல்களின் ஓய்வு பெறும் வயது 58 வயது வரையும் பிரிகேடியரின் ஓய்வு பெறும் வயது 56 வயதுவரையும் நீட்டிக்கப்பட்டிருந்தது.

கேணல் மற்றும் அதற்குக் கீழ் உள்ள பதவிகளைச் சேர்ந்தவர்களின் ஓய்வுபெறும் வயது 55என குறிப்பிடப்பட்டிருந்தது.

கடற்படையின் அட்மிரல் மற்றும் வைஸ் அட்மிரல் பதவிகளின் ஓய்வுபெறும் வயது 60 வயதாகவும் ரியர் அட்மிரல் பதவிக்கான ஓய்வுபெறும் வயது 58ஆகவும் கொமாண்டோக்களின் வயதெல்லை 56ஆகவும் கப்டன் மற்றும் அதற்குக் கீழ் உள்ள பதவிகளைச் சேர்ந்தவர்களின் ஓய்வுபெறும் வயது 55 ஆகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

விமானப் படையின் எயார் சீப் மார்சல் மற்றும் எயார் மார்சல் தரத்தைச் சேர்ந்தவர்களின் வயது 60 ஆகவும் எயார் வைஸ் மார்சல் பதவியின் ஓய்வு பெறும் வயது 58 ஆகவும் எயார் கொமாண்டோ பதவிக்கான வயது 56ஆகவும் குருப் கப்டன் மற்றும் அதற்குக் கீழான பதவிகளைக்கொண்டவர்களின் ஓய்வு பெறும் வயது 55 என்றும் சந்திரிகா வெளியிட்ட வர்ததமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அனைத்து அறிவித்தல்களையும் மஹிந்த ராஜபக்ஷ புதிய வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம் இரத்துச் செய்துள்ளார். (த)

# ஐ.தே. கட்சிக்குள் தீவிரமடையும் உட்பூசல் ரணிலுக்கு எதிராக தொடரும் போர்க்கொடி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சித் தலைவர் பொறுப்பையும் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பையும் பிரதித் தலைவர் கருஜெயசூர்யவிடம் ஒப்படைக்குமாறு ஐக்கிய தேசியக் கடசியினர் ரணிலுக்கு எதிராகத் தொடர்ந்து போர்க்கொடி தூக்கி வருகின்றனர்.

மஹிந்த விஜேசேகர,ராஜித சேனாரட்ன, மிலிந்த மொறகொட ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையிலான குழுக்கள் ரணில் விக்கிரமசிங்கவிடம் இது தொடர்பான வேண்டுகோளை விடுத்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலக வலியுறுத்தி அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் கையெழுத்துடன் கூடிய கடிதமும் ரணிலிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்வரும் தேர்தலிலும் ரணில் போட்டியிட உள்ளாரா என்பது பற்றியும் இந்தக் கடிதத்தின் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமையளவில் இது குறித்து தன் முடிவைத் தெரிவிப்பதாக ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார். எதிர்க்கட்சி மற்றும் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து விலகி அந்தப் பொறுப்புக்களை கருஜெசூர்யவிடம் கையளிக்க ரணில் இணங்கியிருப்பதாகவும் அந்த முடிவை எதிர்வரும் புதன்கிழமை ரணில் அறிவிக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

கட்சியில் மூத்த தலைவர் என்ற பதவியை ஏற்படுத்தி அதனைப் பொறுப்பேற்று வெளிநாட்டு விடயங்களைக் கையாளல்,கட்சிக்கான ஆலோசனைகளை வழங்கல் போன்ற நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபட்டு ஒதுங்கி இருக்குமாறும் ரணில் விக்கிரமசிங்கவை அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் நடைபெறும் ஐ.தே.கவின் தேசிய சம்மேளனக் கூட்டத்திற்குப் பின்னர் நாடளாவிய அளவில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அக்கட்சி வட்டாரங்கள் தொிவிக்கின்றன. (த)

## முத்தலிப் வழக்கு

# சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுப்பிரிவு அதிகாரி லெப் கேணல் முத்தலிப்பின் கொலை வழக்கின் சந்தேக நபர்களின் விளக்கமறியல் டிசம்பர் 12ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து முத்தலிப்பைக் கொலை செய்தவர்கள் யார் என்பது தெரியவந்துள்ளது என்றும் இரகசியப் பொலிஸ் பிரிவினர் கொழும்பு நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

நீதிபதி கிகான் பிலப்பிட்டியவின் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த மனு மீது வசாரணை நடைபெற்றது. இந்த விசாரணையின் போது அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்த பொலிஸார் முத்தலிப் கொல்லப்பட்ட இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெற்றுத் தோட்டாக்கள் அரச இரசாயனப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது பற்றிய அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

கொலைக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 57-9500 இலக்க வான் மற்றும் டபிள்யு.எச்.டி. 5895இலக்க கார் பற்றிய தகவல்களைக் கண்டறிவதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

முத்தலிப் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கையடக்க தொலைபேசி பற்றிய விசாரணைகள் தொடர்வதாகவும் அவரது விளக்கமறியலை நீடிக்குமாறும் பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

இதை ஏற்ற நீதிமன்றம் இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டதாக கைது செய்யப்பட்டுள்ள நால்வரின் விளக்கமறியலை எதிர்வரும் 12ஆம் திகதி வரை நீட்டித்து உத்தரவிட்டது. (த)

# இலவச விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 80ஆவது பிறந்த தினத்தையொட்டி பகவான் மருந்தகத்தினால் வெளியிடப்பட்ட பாபாவின் வர்ணப்படம் அடங்கிய அஷ்டோத்திர நாமாவளி நூல் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. (த)

# கடற்றொழில் சங்கத்துக்கு யூஎன்டிபி அன்பளிப்பு

(காரைநகர்)

காரைநகர் அம்பாள் கடற்றொழில் சங்கத்திற்கு யூஎன்டிபி நிறுவனத்தினால் ஐஸ்கட்டி உற்பத்தி இயந்திரம் உட்பட பல இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் சங்கத் தலைவர் இராசச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ் உபகரணங்களை வழங்கியமை தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

சுமார் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் கட்டிகள் தயாரிக்கும் பாரிய இயந்திரம், ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான போட்டஸ் ராட் இயந்திரம்,(நிழல்பிரதி), ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கணனி,ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் என்பன வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ் உபகரணங்கள் அனைத்தும் எமது கடற்றொழில் சங்க வளர்சிக்காகவும், கடற்றொழிலாளர்களின் மேம்பாட்டிற்கும் விரைவீல் பயன்பாட்டிற்கு விடப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-246)

# பழ மரத் தாய்த் தாவரத்தோட்டம்

புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சின் அனுசரணையுடன் யாழ். விவசாயத் திணைக்களத்தால் பழ மரத் தாய்த் தாவர தோட்டம் ஒன்று சம்பிரதாய பூர்வமாக கடந்த வெள்ளிக்கிழமை 10.30க்கு திருநெல்வேலி மாவட்ட பயிற்சி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டின் சூழலியல், காலநிலை என்பன மா, பலா போன்ற உலர்வலய பழங்களின் உற்பத்திக்கு மிகவும் உகந்ததாகும்.இவற்றின தாய்த் தாவரங்களை ஆய்வு செய்து தரமான தாய்த் தாவரங்களை இனங்கண்டு அவற்றின் கரு மூலவளங்களைப் பேணுவதன் மூலம் மாம்பழம், பலாப்பழம் என்பவற்றின் ஏற்றுமதியை அதிகரிக்கவும் யாழ். மாவட்டத்தின் தனியார் ஒட்டுமுறை பண்ணைகளுக்கு சிறந்த நடுகைப் பொருட்களை விநியோகிக்கவுமே பழ மரத் தாய்த் தாவர தோட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (த-36)

# இலங்கையின் தலைவிதி

“தலைவர்கள் உருவாக்கப்படுவதில்லை. அவர்கள் பிறக்கிறார்கள்”. இக்கூற்று சந்தேகத்திற்கிடமில்லாமல் அதிகமாக நமது தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு பொருந்துகின்றது. அவரைப்பற்றி மதிப்பீடு செய்யும் ஒருவரால், பிரபாகரனின் சாதனைகள் பல யுத்தகளத்தில் மட்டுமல்ல சிக்கல்களும் சிதறல்களும் நிறைந்த அரசியல் துறையிலும் கூட இருப்பதை அவதானிக்க முடியும்.

பிரபாகரன்! சக்தி பொருந்திய ஒரு தலைவன். எந்நேரமும், எதற்கும் பதற்றம் அடையாத, தீட்சண்யமான நோக்குடைய எல்லா விடயங்களையும் அறிந்துகொள்ளும் தேடல்மிக்க, மற்றவர்கள் கருத்திற்கு செவி கொடுக்கும் ஒரு அற்புதமான மனிதன. எந்நேரமும் நேர்த்தியான, கவரக்கூடிய தோற்றம் பிரபாகரனின் சிறப்பு! இவற்றை எல்லாம் சொல்லித் தெரிந்துகொள்வதை விட அவருடன் நேரடியாகக் கலந்துரையாடும் ஒருவரால்தான் இன்னும் அதிகமாக இத் தலைவனைப் பற்றி தெரிந்துகொள்ள முடியும்.

இன்று பிரபாகரன்தான் தமிழ் தேசத்திற்குரிய ஒரு தன்னிகரில்லாத தலைவன என்கின்ற உண்மையை இந்த உலகமே உணர்ந்து கொண்டுவிட்டது. அவர் ஒரு ஆளுமை நிறைந்த துடிப்புள்ள தலைவர் மட்டுமன்றி அரசியல் தொலைநோக்கும் இராணுவ தந்திரங்கள் நிறைந்த புத்திசாலியும் கூட என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். வரலாற்றை எடுத்துப் புரட்டிப்




பார்த்தால் அதில் மிகச் சிலரே இது போன்ற அற்புதப் பண்புகளால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்பது புலனாகும.

இலங்கையில் சிங்கள அரசும், தமிழ்த் தலைவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டவர்களும், நீதிக்குப் புறம்பான செயற்பாடுகளில் ஈடுபட்டபோது அவற்றை உன்னிப்பாக அவதானித்து சமூகத்திற்கு அந்த சீர்கேடுகளை சுட்டிக்காட்டிய பெருமை பிரபாகரனை சாரும். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையின் ஆழத்தை சரியாக அளக்காமல் ஆலோசனை வழங்கியதுதான் அவர்கள் செய்த மிகப்பெரிய தவறு. இதன் சீரற்ற தன்மையும், இராணுவச் சீர்கேடுகளும் கொண்ட இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது.

பிரபாகரன் தன் போராட்டத்தை ஆரம்பித்த நாட்களில் அது ஒரு பயங்கரவாத செயற்பாடு என்று இலங்கை அரசும் வெளிநாட்டு சக்திகளும் உலகெங்கும் பிரகடனம் செய்தன. இது இவ்விரண்டு சக்திகளுமே இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதலாக தமிழ்மக்கள் அனுபவித்து வரும் அடக்குமுறைகள் பற்றி எதுவுமே அறிந்திருக்கவில்லை என்பதைத்தான் காட்டுகின்றது. அதைத் தொடர்ந்து என்ன நடந்தது? தமிழ்த் தேசியத்திற்கும் சிங்கள தேசியத்திற்கும் இடையிலான சமாதானத்திற்கான உடன்படிக்கைகள் பல யுத்தத்தை விரும்பும் சிங்களத் தலைவர்களின் போக்கினால் மங்கிப்போயின. மனித உரிமைகள் மறுக்கப்பட்டன. அரசாங்கத்தின் பிடிக்குள அகப்பட்ட தமிழ்மக்கள் பட்ட இடர்களதான் தனிநாடு வேண்டும் என்கின்ற ஒரு உறுதியை தமிழ்மக்களுக்கு ஊட்டியது. பேரினவாதம் என்கின்ற நெருப்பை ஊதி அதன் மூலமாக ஆட்சியை கைப்பற்றிக் கொண்டவர்களால் இந்த தமிழ் இளைஞர்களின் தேசிய எழுச்சியை கவனிக்க முடியாமல் போனது.

நாம் பொதுவாக கூறும் ஆளுமை நிறைந்த அல்லது துடிப்பு நிறைந்த என்கின்ற சொற்றொடர் தேசியத் தலைவருக்கு பொருந்தியதை நாடு குழப்பத்தின் உச்சத்தில் இருந்த ஒரு சந்தர்ப்பத்தில் காண முடிந்தது. இதுபோன்ற ஒரு தலைவன் வழிநின்ற விடுதலைப் போராட்டத்தை ஊடாக வெளிக்கொண்டு வரவேண்டும் என்பதும் அவரின் நீண்ட எதிர்பார்ப்பாகும்.

கடந்த நவம்பர் 26ஆம் திகதியன்று நடைபெற்ற அவரின் பிறந்ததினம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு வெற்றிக் களிப்பிற்குரிய நாள் என்பது அவர்களின



# ஒரு தனிமனிதனின் கரங்களில்!

“பயங்கரவாதம்” என்று வீணான அவதூறுகளைப் பரப்பிக் கொண்டிருந்த தெற்கைச் சார்ந்த தலைவர்கள் பலரும் இப்போதுதான் நமது தேசியத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தினாலன்றி இப்பிரச்சினைக்கு முடிவு காணமுடியாது என்ற உண்மையை உணர்ந்து கொண்டார்கள்.

கடந்த ஒக்டோபர் 2003இல் பிரபாகரனுடன் எனக்கேற்பட்ட சந்திப்பின் ஊடாக நான் பல விடயங்களை அறிந்து கொண்டேன. அப்போது அவர் தந்தை செல்வநாயகம் மேல் வைத்திருந்த ஓர் உயர்ந்த கோட்பாடு விளங்கியது. அதேநேரம் தமிழ்த் தலைவர்கள் என்று தங்களைக் கூறிக் கொண்ட மற்றவர்கள் எவருமே இந்தப் பிரச்சினைக்கு முகம்கொடுக்க முன்வரவில்லை என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

பிரபாகரனின் மிகப்பெரிய வருத்தம் தமிழ்மக்கள் இன்று மிகவும் சிக்கலான ஒரு நிலைமையில் இருக்கின்றனர் என்பதாகும். அதில் சிங்கள ஆதிக்கத்தின் பிடிக்குள் அகப்பட்டிருக்கும் தமிழ்மக்களின் நிலைமை பரிதாபத்திற்குரியதாகும். யாழ்ப்பாணத்தின் மூன்றில் ஒரு பகுதியில் 40,000றகும் மேற்பட்ட சிங்கள படையினரின் ஆதிக்கம் இருக்கின்றது. உயர் பாதுகாப்பு வலயம என்று அழைக்கப்படும். அப்பகுதிக்குள் மக்கள் சென்று வாழமுடியாமல் இராணுவம் தடுக்கின்றது. இந்த நிலைமை மாறவேண்டும். அப்பகுதி மக்களுக்கு உடனடியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அவருடன் கலந்துரையாடிய அந்தச் சில கணங்களில் என்னால் ஒரு உண்மையை மிகத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிந்தது. “எந்தவித அரசியல் சதித்திட்டம் மூலமாகவோ வேறு எந்தவித தந்திரங்களைப் பாவித்தோ பிரபாகரனை பொறிக்குள் தள்ள எந்த சக்தியாலும் முடியாது என்பதுதான் அவ்வுண்மை. ஏனெனில் எதிராளிக்கெதிராக எதிரி அனுப்பிய காய்களையே நகர்த்திவிடக்கூடிய திறமை அவருக்கு உண்டு.

பெண் விடுதலை, பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக ஒரு உயாந்த கருத்தையே பிரபாகரன் கூறியிருக்கிறார். மேலும், அவர் விடுதலைப் புலிகள் யுத்தத்தினால் விதவைகளாக போன பெண்களுக்கு மறு வாழ்வு கொடுப்பதை வரவேற்கும் மனப்பாங்குடையவர்கள் என்றும் கூறுவார்.




பிரபாகரன் மதம் தமிழ் மக்களைப் பிரிக்கும் ஒரு சக்தியாக மாறிவிடக் கூடாது என்கிற கருத்தில் உறுதியானவர். நமது இஸ்லாமிய சகோதரர்களின் நிலைமையை கருத்திற்கொண்டு அவர்களையும் தமிழ்த் தேசியத்திக்குள் உள்வாங்கிக் கொள்ள வேணடுமென்பது அவரின் ஆணித்தரமான கருத்தாகும். அதேநேரம் தமிழ்மக்களின எல்லைப்பிரதேசங்கள் சிங்கள இனவாதத்தால் அபகரிக்கப்படாமல் தடுக்க வேண்டிய கடமை இஸ்லாமியச் சகோதரர்களுக்கு உண்டு எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியத்திற்கும், கலாசாரத்திற்கும் விழுதாகவும் விழுமியமாகவும் நிற்கும் தமிழ் மொழிக்குரிய மரியாதையை கோயில்களிலும், திருமண வைபவங்களிலும் குழந்தைகளுக்கு பெயர் வைப்பதிலும் செயற்பாடுகள் மூலமாக கண்கூடாக தெரிந்தது. இது அவருக்கு வாழும்போது செய்யும் ஒரு மரியாதையாகவே தமிழ் மக்களாகிய நாங்கள் அனைவரும் நம்புகின்றோம். வரலாறு இந்நிகழ்வை அடக்கி ஆளப்பட்ட தமிழ் இனத்தின் ஓர் எழுச்சிப் பெருநாளாக பதிவுசெய்யட்டும்.

**மா.க.ஈழவேந்தன்**

கடந்த ஐம்பது அறுபது எழுபது எண்பதுகளில் தமிழ் மக்கள் சிங்கள இனவாதத்தால் ஓட ஓட விரட்டப்பட்டு அடக்கி ஆளப்பட்டனர் என்பதற்கு தமிழ் மக்கள் அனைவருமே சாட்சி.

தேசியத் தலைவர் பற்றி இந்திய எழுத்தாளர் எம்.ஆர்.நாராயண சுவாமி எழுதிய **“Inside an illusive mind- Pirapakaran”** என்ற புத்தகத்தில் கூறப்பட்ட ஒரு மேற்கோளுடன் இக்கட்டுரையை முடிப்பது பொருத்தமாகும் என்று எண்ணுகிறேன்.

“இலங்கை இன்று இனப்பிரச்சினைக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் தீர்வு ஒன்று எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றது. அவை எந்தவித காரணங்களாலும் எடுக்கப்பட முடியாமல் போகுமானால் 20 மில்லியன் மக்களை கொண்ட இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றவர் ஒருவர்தான்- அவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன்”. □

# அரசியல் விவகார சபை புத்துயிர் பெறும்!

(கொழும்பு)

செயல்படாதிருக்கும் அரசியல் விவகார சபையை மீண்டும் செயல்திறன் உள்ள அமைப்பாக மாற்றும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அரசியல் விவகார அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சபாநாயகருடன் ஆலோசனைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமருக்கு பணிப்புரை வித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அரசியல் வவகார அமைச்சர் டி.யூ.குணசேகர மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் விவகார சபையை ஸ்தாபிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக முக்கிய பல ஆணைக்குழுக்களை நியமிப்பதில் இடர்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்ற முக்கியமான ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதில் பாரிய காலதாமதம் ஏற்பட்டுள்ளன என்றார். (த-7)

# சமாதான காலத்தில் கல்வித்துறையில் வளர்ச்சி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் சமாதான சூழ்நிலை காரணமாக அங்கு கல்வித்தரம் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வருவதாக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவிய போர் அனர்த்தம் காரணமாக கல்வித்தரம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருந்தது.

ஆனால் கடந்த 3 ஆண்டுகால சமாதான சூழ்நிலை காரணமாக இந்த மாகாணக் கல்வித்துறைக்கான வளங்களை கணிசமான அளவு அதிகரிக்க முடிந்துள்ளது என்று பொன்னம்பலம் குறிப்பிட்டார். (த-7)


## மட்டக்களப்பில் ஹர்த்தால்

மட்டக்களப்பு காத்தான் குடியில் இரண்டாவது நாளாகவும் நேற்றுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தால் காரணமாக அன்றாட இயல்பு நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டன.

காத்தான் குடிப் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீல் கடந்த வெள்ளிக்கிழமை ஆயுத பாணிகளால் சுடப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று முன்தினம் முதல் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. (த-7)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## நிறத்தினால் மனிதரில் பாகுபாடு இல்லை



சிறுவன் மூர்த்திக்கு ஒரு பெரிய மனக்குறை. அவன் நிறம் கறுப்பு. அவன் நண்பர்கள் அவனை சிறு பையனாக இருக்கும்போதே 'காக்கா' என்று கேலி செய்வார்கள். அதைக் கேட்டு அவன் அழுவான். அவன் அழுவதைப் பார்த்து நண்பர்கள் மேலும் அதிகமாய் கேலி செய்வார்கள். அப்படி அவன் ஒரு கேலிப் பொருளாய்ப் போனான்.

அவன் வளர வளர அவனுக்கு தாழ்வு மனப்பான்மையும் வளர்ந்தது. பொது இடங்களுக்குப் போகமாட்டான். விளையாட்டு எதிலும் சேரமாட்டான். பள்ளிக்கூடம் விட்டது போக மற்ற நேரம் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பான்.

அவன் தாழ்வு மனப்பான்மையைப் பார்த்து அவன் அப்பா மிகவும் வருத்தப்படுவார். மூர்த்திக்கு நிறைய புத்திமதி கூறுவார். "மனிதனின் நிறத்தினால் எந்த மேன்மையோ தாழ்மையோ கிடைப்பதில்லை. அவனுடைய குணநலன்களே அவனை உயர்த்தவோ தாழ்த்தவோ செய்யும்" எனக் கூறுவார். ஆனாலும் அவன் உள்ளத்திற்குள் ஏற்பட்ட வடு அவனை சிந்திக்க வைக்கவில்லை.



பள்ளிப்படிப்பை முடித்து கல்லூரியில் சேரும் நாள். புதியவர்களை பழைய மாணவர்கள் கேலியும் கிண்டலும் செய்து வரவேற்பது வழக்கம் தானே. அதன்படி அவன் கல்லூரிக்குள் நுழைந்தவுடன் "பாரடா காக்கை ஒன்று கல்லூரிக்குள் நுழையுது தேறுமா என்று பார்ப்போம்" என்று கேலி செய்து அருகில் வந்தார்கள்.

அதிலும் பாலு என்ற மாணவன் மிகவும் அதிகமாகக் கிண்டல் செய்தான். அவன் கல்லூரி மாணவத் தலைவன்.

பாலு மூர்த்தியைக் கேலி செய்ய செய்ய அவனுக்கு அழுகை வந்துவிட்டது. எங்கு போனாலும் நம்ம துயரம் நம்மை விட்டுப் போகாது போலும் என்று எண்ணி வேதனைப் பட்டான். இருந்தாலும் என்ன செய்வது. படிக்க வேண்டியதிருக்கிறதே, வாழ்ந்தாக வேண்டியதிருக்கிறதே.

மூர்த்தி கண் கலங்கவும் பாலுவுக்கு இரக்கமாய்ப் போய்விட்டது. மேலும் கிண்டலில் அவனை வெறுப்பேற்ற ஆரம்பித்துவிட்டான்.

"காணக்கிடைக்காத கருங்குயிலே, அண்டங்காக்காவே, கறுப்பு யானையே, கருங்குரங்கே கண்மைடப்பாவே, கல்லூரிக்கென்று வந்துவிட்ட திருஷ்டி பொம்மையே வருக வருக" என கேலி செய்தான்.

மூர்த்தி பல்லைக் கடித்துக் கொண்டான். யாரும் எதுவும் சொல்லி விட்டுப் போகட்டும். நாம் படிப்பில் கவனம் செலுத்தி முன்னேறுவோம் என்று எண்ணிக் கொண்டான்.

ஆனாலும் பாலு கொஞ்சங் கூட மூர்த்தியின் வேதனையைப் புரிந்து கொள்ளவில்லை. மூர்த்திக்கு 'கருமை நிறக் கண்ணா' என பெயர் சூட்டி அழைக்கலானான்.

கேலிக்கும், கிண்டலுக்கும் நடுவில் மூர்த்தியின் கல்லூரி வாழ்க்கை ஓடியது.

ஒருநாள் கல்லூரியிலிருந்து சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றார்கள். போன இடத்திலும் பாலு தனது சண்டியர்தனத்தைக் காட்டினான். பாறைக்குப் பாறை தாவினான். மரங்களில் ஏறி நீர்க்குள் குதித்தான். இப்படியாக தனது வீரப்பிரதாபங்களைச் செய்து காட்டிக் கொண்டிருந்தான். ஒரு பாறையிலிருந்து இன்னொரு பாறைக்குத் தாவும் போது கால் இடறி பெரும் பள்ளத்துக்குள் விழுந்துவிட்டான். கையும், காலும் அடிபட்டு முறிவு ஏற்பட்டது. மண்டையிலும் பலத்த காயம். இரத்தம் வெகுவாக வெளியேறியது.

பள்ளத்திலிருந்து பாலுவை மீட்க முடியவில்லை. தீயணைப்புப் படையினர் வந்தனர். ஒருவழியாகப் பாலுவை வெளியே எடுத்தனர். உடனடியாக பாலு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான்.

காயங்களுக்கு மருந்திட்டுக் கட்டினார்கள். உயிர் பிழைக்க வேண்டுமானால் உடலில் இரத்தம் செலுத்தவேண்டும் என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்.

அந்த ஊரில் இரத்த வங்கி வசதி கிடையாது. மாணவர்களிடமிருந்து தான் பொருத்தமான இரத்தம் பெறவேண்டும். எல்லா மாணவர்களின் இரத்தத்தையும் சோதித்தார்கள். கடைசியில் மூர்த்தியின் இரத்தமே பொருத்தமாக இருந்தது.

மூர்த்தியின் இரத்தத்தை பாலு உடம்பில் செலுத்தினார்கள்.

இரத்தம் ஏற ஏற பாலு உடம்பில் தெம்பு வந்தது. ஊருக்கு செய்தி போயிருந்ததால் பாலுவின் குடும்பத்தார் ஓடி வந்திருந்தார்கள்.

இரண்டு வாரம் பெரிய ஆஸ்பத்திரியில் இருந்த பாலு பின்னர் வந்து உள்ளூர் ஆஸ்பத்திரியில் சேர்ந்திருந்தான்.

கல்லூரி நண்பர்களெல்லாம் பாலுவைப் பார்க்கப் போயிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் மூர்த்தியும் இருந்தான்.

மூர்த்தியைக் கண்டதும் பாலுவின் கண்களில் நீர் ஓட ஆரம்பித்தது. மூர்த்தியைப் பக்கத்தில் அழைத்தான். கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டான்.


"நான் இன்றைக்கு உயிரோடு இருக்கிறேன் என்றால் அது நீ கொடுத்த பிச்சை. நான் உன்னை எவ்வளவோ மனம் நோகும்படி பேசியிருக்கிறேன். உன் நிறத்தை சொல்லி கிண்டல் அடித்திருக்கிறேன். என்னை மன்னித்துவிடு. நிறத்தினால் மனிதரில் பாகுபாடு இல்லை. உதிரம் எல்லோருக்கும் பொது என உணர்ந்து கொண்டேன்" என்றான்.

பாலு மனம் மாறியது குறித்து மூர்த்திக்கு சந்தோஷம்.

அதேநேரம் மூர்த்தியும் தன் தாழ்வு மனப்பான்மையிலிருந்து வெளியே வந்தான். நிறத்தினால் ஒன்றுமில்லையென உணர்ந்து கொண்டான்.

அதன்பின் பாலுவும், மூர்த்தியும் இணைபிரியாத நண்பர்களாய் மாறினர்.

## ஜேம்ஸ் வாட்



**(James, Watt 1736 – 1819):** ஜேம்ஸ் வாட் ஸ்கொட்லாந்தில் கிரீனாக் (Greenock) என்னுமிடத்தில் பிறந்தார். இளம் வயதில் கணிதத்தில் இவர் ஆர்வம் காட்டினார். இவருடைய தந்தை ஒரு சிறு வணிகர். சிறந்த தச்சருங்கூட. அவருடன் சேர்ந்து ஜேம்ஸ் வாட் தச்சு வேலையில் ஈடுபட்டுவந்தார். கணிதக் கருவிகள் செய்வதில் மிக்க ஆர்வங் கொண்டு அதில் பயிற்சி பெறுவதற்காகத் தம் 19ஆம் வயதில் லண்டன் சென்றார். ஆனால் அங்கு உடல்நலம் குன்றியதால் ஓர் ஆண்டுக்குள் திரும்பி விட்டார். ஸ்கொட்லாந்திலேயே கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் கணிதக் கருவிகள் செய்பவராக வேலைக்கு அமர்ந்தார்.

1763இல் இவரிடம் ஒரு நீராவி எஞ்சினைப் பழுது பார்ப்பதற்காகத் தந்தனர். உண்மையில் அதில் பழுது எதுவும் இல்லை. போதிய அளவு நீராவியை உற்பத்தி செய்ய இயலாத அளவுக்கு அதிலுள்ள கொதிகலன் சிறியதாக இருந்தது. ஜேம்ஸ் வாட் அதை நன்கு ஆராய்ந்தார். அதிலுள்ள மற்றக் குறைகளையும் திருத்தியமைத்தார். அவர் திருத்தியமைத்த நீராவி எஞ்சின் மிகத் திறம்படச் செயற்பட்டது.

1774இல் ஜேம்ஸ் வாட், போல்ட்டன் (Boulton ) என்ற தொழில் அதிபருடன் கூட்டுச் சேர்ந்து நீராவி எஞ்சின் தயாரிக்கும்நிறுவனத்தைத் தொடங்கினார். கூட்டு நிறுவனம் வெற்றிகரமாக நடைபெற்றது விரைவில் இவர் புகழ் பெற்றார்.

## விலங்குகளின் வினோதம்...



- சிங்கத்தின் வால் நுனியிலுள்ள ரோமக் கொத்தினுள் ஆணி போன்ற எலும்பு உண்டு. இது எதிரியைத் தாக்குவதற்கு முன் தன் வால் நுனியைச் சாட்டைபோல் தன் உடலில் அடிக்கும். அப்போது இந்த எலும்பு அதன் உடலை உரசிக்கொண்டு போகும். தன் கோபத்தை இவ்வாறு சிங்கம் கிளறிக்கொள்கிறது.



- ஆண்புலி தன் குட்டிகளிடமே கொடூரத்தைக் காட்டும். தன் குட்டி என்ற அன்பு அதற்குக் கடுகளவுகூடக் கிடையாது. அதனிடமிருந்து குட்டிகளைக் காப்பாற்ற பெண் புலி அதனுடன் மூர்க்கமாகப் போர் புரிந்து அதை விரட்டும்.
- சிறுத்தைப் புலிகள் நாய்களைக் கண்டால் விடுவதில்லை. எப்படியாவது அடித்துக்கொன்று தின்னவே முயற்சிக்கும். ஏனென்றால் நாய் இறைச்சி என்றால் அதற்கு கொள்ளைப் பிரியம்.
- பூனையின் நாக்கின் மேல் பாகம் உப்புக் காகிதத்தைப் போல் சொர சொரப்பாக இருப்பதால் அதனால் எலும்புகளில் ஒட்டி இருக்கும் இறைச்சி துணுக்குகளைக் கூட நன்றாய்த் துடைத்தெடுத்து உண்ண முடிகிறது.



## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்த பட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?



நம்பிக்கை எதையும்
துணிந்து செய்கிறது;
அன்பு எதையும்
பொறுத்துக்கொள்கிறது.
– ஓர் அறிஞர்

## விடுகதைகள்

1. வலை பின்னியவன் கடலுக்குப்போகாமலே மீன் பிடிப்பான். அவன் யார்?
2. வெளுக்காத போர்வை வெண்மையாய் இருக்கும் யாரும் நிரப்பாமலே குளம் நிறைந்திருக்கும். அது என்ன?
3. தரையில் போட்டதை எடுக்க முடியவில்லை. அது என்ன?
4. வெள்ளாடு மேயக்கண்டேன் இரண்டு கொம்போடு நகரக் கண்டேன். அது என்ன?
5. நாளெல்லாம் ஆட்டம் தான் தூங்காமல் ஓட்டம் தான் அவன் யார்?

**விடுகதைகள்**

1.சிலந்தி 2.தேங்காய் 3.கோலம்
4.நத்தை 5.கடல் அலை

**கண்டுபிடியுங்கள்**

1.வெண்கட்டி 2.கரும்பலகைப் படம்
3.புத்தகம் 4.விசில்
5.ஸ்கூல் பை 6.மோதிரம்
7.மூக்குக் கண்ணாடி

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டிய

## சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

**சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 நவம்பர் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**





முன்னுரை

இந்தச் சமவாயத்திற் பங்குகொள்ளும் நாடுகள்,

ஐக்கிய நாடுகள் சாசனம் பிரகடனஞ் செய்துள்ள கோட்பாடுகளின் படி, உலகில் சுதந்திரம் நீதி, சமாதானம் என்பன நிலைபெற வேண்டுமானால், மனித சமுதாயத்தின் சகல உறுப்பினர்களினதும் உள்ளார்ந்த கௌரவம், சமமானதும் பிறர் அபகரிக்க முடியாததுமான உரிமை ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளுதல் அடிப்படையானதென்பதைக் கருத்திற்கொண்டு,

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்தவர்கள், மனிதப் பிறவியின் அடிப்படை உரிமைகள் மீதும் கௌரவம், பெறுமதி ஆகியவற்றின் மீதும் தமக்குள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தி, விரிவான சுதந்திரத்துடன் சமூக முன்னேற்றத்தையும், சிறப்பான வாழ்க்கைத் தரங்களையும் மேம்படுத்த உறுதி பூண்டுள்ளனர் என்பதை நினைவு கூர்ந்து,



ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்திலும் மனித உரிமைகள் மீதான சர்வதேச ஒருப்பாடுகளிலும் வரையறுக்கப்பட்டுள்ள சகல உரிமைகளும் சாதி, நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது பிறகோட்பாடு தேசிய அல்லது சமூகப் பூர்வீகம் ஆதனம் பிறப்பு அல்லது பிற தராதரம் போன்ற எத்தகைய பாகுபாடுமின்றி ஒவ்வொருவருக்கும் உரியனவெனப் பிரகடனஞ் செய்து உடன்பட்டுள்ளதென்பதை ஏற்றுக் கொண்டு,

சிறுபிராயமானது, சிறப்பான பராமரிப்பும் ஆதரவும் பெறும் உரிமையுடையதென மனித உரிமைகள் மீதான சர்வதேச பிரகடனத்தில் ஐக்கிய நாடுகள் சபை அறைகூவியுள்ளமையை நினைவிற் கொண்டு,

குடும்பமானது சமுதாயத்தின் ஆதாரமான குழுவாகவும் அதன் சகல உறுப்பினர்களினதும், அதிலும் குறிப்பாக சிறுவர், சிறுமியரின் வளர்ச்சி நல்வாழ்வு ஆகியவற்றுக்கு ஏற்ற இயற்கைச் சூழலாகவும் விளங்குகின்றபடியால், சமுதாயத்தில் அது தனக்குரிய முழுப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்வதற்கு அவசியமான பாதுகாப்பையும், ஒத்தாசையையும் அதற்கு அளித்தல் வேண்டுமென்பதில் நம்பிக்கை கொண்டு,

குழந்தை தனது ஆளுமையை முழுமையாகவும், இசைவாகவும் விருத்தி செய்வதற்கு ஒரு குடும்பச் சூழலில் ஆனந்தமும், அன்பும் பற்றுணர்வும் உள்ள சுற்றாடலில் வளர வேண்டுமென்பதை ஏற்றுக்கெண்டு,

சமுதாயத்தில் பிள்ளைகள் தனிப்பட்ட வாழ்க்கை நடத்துவதற்கு முற்று முழுதாகத் தயார்ப்படுத்தப்படவும், ஐக்கிய நாடுகள் சாசனத்தில் வரையறுத்துள்ள ஆத்மார்த்தப் பண்புகளுக்கமைய, அதிலும் குறிப்பாக சமாதானம், கண்ணியம், சகிப்புத்தன்மை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய இலட்சிய உணர்வுடன் வளர்க்கப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு,

சிறுவருக்குச் சிறப்பான பராமரிப்பு அவசியமென்பது 1924 ஆம் ஆண்டின் உரிமைகள் பற்றிய ஜெனிவாப் பிரகடனத்திலும், 1959ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பெதுச் சபை ஏற்றுக்கொண்ட சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்திலும் கூறப்பட்டுள்ளதென்பதையும், மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்திலும், குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒருப்பாட்டிலும் (குறிப்பாக 23, 24ஆம் உறுப்புரைகளில்) பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச ஒருப்பாட்டிலும் (குறிப்பாக 10ஆம் உறுப்புரையில்) சிறுவர், சிறுமியரின் நலனில் அக்கறை கொண்டுள்ள விசேட முகவர் நிலையங்கள், சர்வதேச அமைப்புக்கள் ஆகியவற்றின் நிரந்தர விதிகள் மற்றும் தொடர்புடைய ஒப்பந்தங்களிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென்பதையும் மனத்திருத்தி, சிறுவர் உரிமைகள் மீதான பிரகடனத்தில் சுட்டிக்காட்டியுள்ளவாறு, குழந்தை உடலாலும், உள்ளத்தாலும் முதிர்ச்சியற்றிருப்பதன் காரணமாக அது கருவில் இருக்கும் போதும் பிறந்த பின்னரும், முறையான, சட்டவாரியான பாதுகாப்பு உட்பட விசேட பாதுகாப்புக்களும், பராமரிப்பும் அதற்கு அவசியம் என்பதை மனதிற்கொண்டு,

தேசிய மற்றும் சர்வதேச வாரியாகக் குழந்தைகளைத் தாபரித்தல், தத்தெடுத்தல் தொடர்பான உறுப்புரையினைச் சிறப்பாகவும், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சேமநலன் என்பன சார்ந்த சமூக, சட்ட விதிகள் மீதான பிரகடனத்தின் உறுப்புரைகளைப் பொதுப் படையாகவும் நினைவு கூர்வதுடன், பாலியக் (இளவயது) குற்றவாளிகளுக்கு நியாயம் வழங்குதல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் குறைந்தபட்ச நியம விதிகள், பெய்ஜிங் விதிகள், அவசரகாலத்திலும் ஆயுதப் போராட்டத்தின் போதும் பெண்கள், பிள்ளைகள் ஆகியோரைக் காத்தல் சம்பந்தமான பிரகடனம் ஆகியவற்றையும் நினைவு கூர்ந்து,

உலகின் எல்லா நாடுகளிலும் சிறுவர், சிறுமியர் மிக மிகச் சிரமமான, கஷ்டமான நிலைமைகளிலே வாழ்கிறார்கள் என்பதையும் அத்தகைய பிள்ளைகளுக்கு விசேட கரிசனை அவசியமென்பதையும் ஏற்றுக்கொண்டு,

பிள்ளைகளின் பராமரிப்புக்கும், இசைவான வளர்சிக்கும் ஒவ்வோர் இன மக்களினதும் பாரம்பரியங்களும், கலாசர சீலங்களும் முக்கியமென்பதைக் கவனத்திற்கொண்டு

ஒவ்வொரு நாட்டிலும், அதிலும் குறிப்பாக வளர்முக நாடுகளில், சிறுவர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்குச் சர்வதேச ஒத்துழைப்பு முக்கியமென்பதை ஏற்றுக்கொண்டு. பின்வருமாறு உடன்பட்டுள்ளன:

**பாகம் I**

**உறுப்புரை 1**

தற்போதைய சமவாயத்தின் நோக்கங்களின் பொருட்டு 18 வயதுக்குக் குறைந்த மனிதப் பிறவி ஒவ்வொன்றும் ஒரு பிள்ளை எனக் கருதப்படும். சிறுவர் தொடர்பான சட்டத்தின்படி, பிராயமடையும் வயது முன்னதாகவே வரையறுக்கப்பட்டிருந்தாலன்றி, மேற்படி வயதெல்லையே பிள்ளையைக் குறிக்கும்.

**உறுப்புரை 2**

1.அரசதரப்பினர் தமது பரிபாலனத்துள் வரும் ஒவ்வொரு பிள்ளையையும், அதன் பெற்றோர் அல்லது சட்டப்படியான பாதுகாவலரின் சாதி, நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு கோட்பாடு, தேசியம், இனம் அல்லது சமூகப் பூர்வீகம், ஆதனம், ஊனம், பிறப்பு அல்லது வேறு ஏதும் அந்தஸ்து போன்ற பாகுபாடு எதனையும் பொருட்படுத்தாது, இச்சமவாயத்திற் கூறப்பட்டுள்ள உரிமைகளின்படி மதிக்கவும் அவற்றை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

2.பிள்ளையின் பெற்றோர் சட்டப்படியான பாதுகாவலர் அல்லது குடும்ப உறுப்பினர்களின் அந்தஸ்து, நடவடிக்கைகள், அவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் அல்லது நம்பிக்கைகள் ஆகியவற்றின் மீதான எத்தகைய பாரபட்சம் அல்லது தண்டனையலிருந்தும் பிள்ளையைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளை அரச தரப்பினர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**உறுப்புரை 3**

1.சிறுவர்கள் சார்பாக அரசாங்க அல்லது தனியார் சமூக நல அமைப்புக்கள், நீதிமன்றங்கள், நிர்வாக அதிகார சபைகள் அல்லது சட்டவாக்கக் குழுக்கள் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளிலும் பிள்ளையின் அதியுயர் நலனே முழுமுதற் கவனம் பெறல்வேண்டும்.

2.அரச தரப்பினர், பிள்ளையின் நல்வாழ்வுக்கு அவசியமான பாதுகாப்பையும் பராமரிப்பையும் உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பேற்றல் வேண்டும். இது விடயத்தில், பிள்ளையின் பெற்றோர், சட்டப்படியான பாதுகாவலர் அல்லது சட்டப்படி பொறுப்புடைய தனிநபர்களின் உரிமைகளும் கடமைகளும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

3.சிறுவர் பராமரிப்பு அல்லது பாதுகாப்புக்குப் பொறுப்பாயிருக்கும் நிறுவனங்கள், சேவைகள், வசதிகள் ஆகியனவற்றில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை, தகைமை மற்றும் திறமையான கண்காணிப்பு விடயங்களில், அதிலும் குறிப்பாகப் பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில் தகுதி வாய்ந்த அதிகாரிகள் வரையறுத்துள்ள விதிமுறைகளுக்கு அமைய ஒழுகுவதனை அரச தரப்பினர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*(அடுத்த வாரம் தொடரும்...)*

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சறுவர்கள் நாளைய தலைவர்கள' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகுமதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

**சிறுவர் பாதுகாப்பு இலங்கை யாழ்ப்பாணம்**

# உணவாகிக் கொல்லும் இரசாயனப் பதார்த்தங்கள்

உலகில் வாழும் எல்லா விலங்குகளுக்கும் உணவும் உறைவிடமும் அத்தியாவசியமானவை. சிறப படைந்த விலங்கான மனிதனுக்கு ஆடையும் அவனில் பாதியாகிவிட்டது. மனிதன் உள்ளெடுக்கின்ற உணவானது அவனுக்குப் பல வழிகளிலும் பயன்படுகின்றது.

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பது பழமொழி. நல்ல சுகநலத்துடன் உடல் இருந்தாலே உலகில் வாழலாம் என்பது புதுமொழி. நாம் உண்ணும உணவின் ஒரு பகுதி என்பு, பல், தசை, உள் அங்கங்கள் போன்ற உடற்பாகங்களை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், எமது நாளாநதச செயற்பாடுகளுக்கான சக்தியை வழங்கும் எரிபொருளாகவும் பயன்படுகின்றது.

காய்கறிகள், தானியங்கள், கடலுணவுப் பொருட்கள், விலங்குணவுப் பொருட்கள் என எங்கள் உணவு மூலகங்கள் உள்ளன. இக்காலத்தில் வேகமான உலக முன்னேற்றத்தோடு, எம் உணவுப பழக்கமும் மாறத் தொடங்கியுள்ளது. எமது சாப்பாட்டு மேசைகளையும் அடுப்படிகளையும் தயாரிக்கப்பட்ட உணவுகள் பெருமளவில் ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன.

எமது முநதைய தலைமுறையினர் பெருமளவு இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்க்கையை உணவுப் பழக்கவழக்கங்களைக கொண்டிருந்ததோடு, உணவையே மருந்தாகவும் பயன்படுத்தத் தெரிந்திருந்தனர். இக்காலத்திலோ மருந்துகளையே உணவாக உள்ளெடுக்கின்ற ஒரு சமூகத்தைப் பார்க்கக்கூடியதாக உள்ளது. இன்று எம்மவரிடையே காணப்படுகின்ற மலச்சிக்கல் போன்ற குடல் வருத்தங்களுக்கும், பல உறுப்புகளில் ஏற்படும புற்றுநோய்களுக்கும் அவாகளது உணவுப் பழக்கவழக்கமே பெருமளவில் காரணமாக அமைகின்றது.

இயற்கையாகக் கிடைக்க வேண்டிய விற்றமின்கள், கனியுப்புக்கள் போன்ற போசனைப் பதார்த்தங்களைச் செயற்கையான மாத்திரைகளில் எம்மவாகள் தேடுகின்ற அவலத்தை இப்போது காணக்கூடியதாக உள்ளது.

எங்கள் பிரதேசத்தில் பெறப படும் உணவுப் பொருட்கள் பெருமளவில் தெரிந்தோ, தெரியாமலோ செயற்கை இரசாயனங்களின் சேர்க்கைக்கு உட்பட்டே கிடைக்கிறது. இச் சேர்க்கையானது பொருட்கள் உற்பத்தியாகும் இடத்திலிருந்து போக்குவரதது, களஞ்சியம், விநியோகம் எனத் தொடர்ந்து எங்கள் வீட்டுச் சமையலறைவரை வருகின்றது. எனவே, உயிருக்கு ஆதாரமான உணவு நஞ்சானால் உடலுக்கு பலவகையான சேதங்கள் உருவாகின்றது.

இன்று விவசாய உலகம் எதிாநோக்கும் மிக முக்கியமான பிரசசினையாக அதீத பீடைநாசினிகள், களை கொல்லிகள் மற்றும் செயற்கை உரங்களின் பாவனை உள்ளது. தற்போது விவசாயத்தில் முன்னேறிய தேசங்கள் இயற்கையோடு இணைந்த விவசாயத்தைப் பற்றிச் சித்தித்துக் கொண்டிருக்க, நம்மவர்களோ மேலும் மேலும் செயற்கையை நாடுபவர்களாக உள்ளனர். எம்மவர்கள் எதிர்காலத்தில் வரக்கூடிய ஆபத்துக்களை அறியாதவர்களாய் குறுகிய காலத்தில் கூடிய விளைவுகளைப் பெறுவதற்கு செயற்கையான கிருமி நாசினிகளை மற்றும் உரங்களை அளவுகதிகமாக பெருமளவில் பயன்படுத்துகிறார்கள்.

எங்களால் விரும்பிச் சாப்பிடப்படுகின்ற, பிஞ்சுக்கத்தரி, வெண்டி, பயற்றை, கோவா, குண்டுத் தக்காளி போன்றவை எல்லாம் பீடைநாசினிகளால் ஏதோ ஒரு முறையாவது குளிப்பாட்டப்பட்டவையாகும். ஏனெனில், இவற்றில் பீடைகளின் தாககம் கூடியளவு ஏற்படுவதால இதனைத் தடுக்கவென, தொடர்ச்சியாக குறித்த கால இடைவெளியில் பீடை நாசினிகளை விசிற வேண்டிய தேவை உள்ளது. இக்காலப் பகுதியில்தான அறுவடையும் செய்யவேண்டியுள்ளது. எனவே, சந்தைக்கு வரும் பொருட்கள் நச்சுத்தனமை கூடுதலாக இருக்கும நிகழ்தகவு அதிகமாக உள்ளது.

பொதுவாகவே, கிருமிநாசினிகள் விசிறிய 10-14 நாட்களுககுப் பின்பே விளைபொருட்களை உணவுக்காகப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில், இக் காலப் பகுதியில் பெரும்பாலானவை சூரியஒளியால் பிரிகையடைந்து,அவற்றின் நச்சுத்தன்மை குறைவடைந்துவிடும். ஆனால், எமது விவசாயிகளோ குறித்த கால இடைவெளியைக் கொடுக்காமல் விளைபொருட்களைச் சந்தைபபடுத்துகிறார்கள். எனவே, பனி நீரில் தோய்ந்த காய்கறிகளென நாம் ஆசையாய் வாங்குபவறறில் விசிறப்பட்ட நஞ்சுகளில சிறு பகுதியாவது மிஞ்சியிருக்கும.

சில பதார்த்தங்கள் பிரிகையடையாது உணவுடன் எமது உடலை அடைகின்றன. இவை எமது உடலில் பல உள்ளுறுப்புக்களில் படிப்படியாகவே தேங்கத் தொடஙகுகின்றன. இவ்வாறு தேங்கி ஒரு குறித்த செறிவை அடைந்ததும் உடற்களைப்பு, பலவீனம், தசைப பிடிப்பு, பார்வைக் கோளாறுகள் போன்ற நோய் அறிகுறிகளாக வெளிப்படுகின்றன. சில சமயங்களில் இவை புற்றுநோய்கள் போன்ற பாரிய நோய்களாகவும் வெளிப்படலாம்.

மலைநாட்டின் பயிராக ஒரு காலத்தில் கருதப்பட்ட கோவா, இன்றைக்கு எம் பிரதேசத்தில் செய்கை பண்ணப்படுகின்றது. இதல் புழுக்களின் தாக்கம் மிக அதிகமாகும். எனவே, தொடர்ந்தும் பீடைநாசினிப் பிரயோகம் செய்யப்படவேண்டும். தெளிக்கப்படுகின்ற இரசாயனங்கள் விரிந்த கோவா இதழ்களில் தேங்கி அது முட்டையாக வரும்போதும், அதனுள்ளே இருக்கலாம். சூரிய ஒளிபடும் வாய்ப்புக் குறைந்து நசசுத்தன்மை அழியாமல் போகலாம். எம்மில் ஒரு சிலராவது, கோவாத் தோட்டத்துக்கு அருகிலுள்ள வீதியால் போகும் போது காற்றில் வருகின்ற மருந்து நாற்றத்தை நுகர்ந்திருக்கலாம்.

சீசனுக்கு,என்று வருகின்ற வெங்காயத்தடல்,பெரும்பாலானோருக்கு பிடித்த ஒரு உணவு. இதுவும் பீடை நாசினிகளில் குளித்தே சந்தைக்கு வருகின்றது. 'ஆண்டவனைப் போல் எங்கும் நிறைந்தவை' விவசாய இரசாயனங்கள் என்னும்படி, எல்லாப பொருட்களையும் இன்றைய விஞ்ஞான முன்னேற்றம் தீண்டி வருகின்றது. எனினும், மரவள்ளி, புசனி, கறணை போன்றவை இன்று வரை கிருமிநாசினிகளின் தாக்கத்தில் இருந்து பெருமளவு தப்பியுள்ளன.

விலங்குணவுகளையாவது இவற்றின் நெடுங்கரங்கள் விட்டு வைத்தனவா என்றால் அதுவும் இலலை. புல்லாய், பூடாய், பச்சைத தாவ ரங்களாய்,பருகும் நீராய் என எல்லா இடங்களிலும் ஏதோ ஒரு விதத்தில் கலந்திருக்கின்றன. கிருமிநாசினி விசிறப்பட்ட பயிற்செய்கை நிலங்களில் மேய்ந்த கால்நடைகளை அடைந்த கிருமிநாசினிகள் அவற்றை நாம் இறைசசிக்காகவும் பாலுக்காகவும் பயனபடுத்தும்போது எமது உடலை வந்தடைகின்றன. இவ்வாறு கடலுணவுகளும் ஆபத்துள்ளதாக அறிய இருக்கின்றது.

கடைகளில் இன்று தொங்குகின்ற வாழைக்குலைகளைப் பார்த்தால் ஒருகிலோவாவது வாங்கிப்போக வேண்டும் என்ற ஆசை வராமல் போகாது. அவ்வளவுக்கு முழிப்பான பழங்களாக இருக்கும். அவற்றை வாங்கி வீட்டுக்குக் கொண்டுபோய்ப் பார்த்தால் சுவையற்றவையாக நீர்த்தன்மையானவையாக இருப்பதைக் காணலாம். காரணத்தைத் தேடிப்போனால் கிடைக்கின்ற விடை வியப்படையவைக்கும் இரசாயன உரங்களின் கைவரிசையில் முழிபபான பழங்கள் உருவாகியிருககும். அவற்றை மஞ்சள் வர்ணமாக மாற்றுவதற்கு உர வகைகளை கரைத்துத் தெளித்திருப்பார்கள். பெரிய பழக்கவர்ச சியில் நாம் வேண்டாத வியாதிக்கான மூலகங்களையும் வேண்டுபவர்களாக இருக்கின்றோம.

அண்மையில், விவசாய பீடத்தினரால் யாழ்ப்பாணத்தில் மேற கொள்ளப்பட்ட விவசாய ஆராய்ச்சியில், விவசாய நிலங்களுக்கு அருகிலுள்ள நீர் நிலைகளின் உர வகைகளின் செறிவு கணிப்பிடப்பட்டபோது, அது மனிதனுக்கு நச்சுவிளைவை ஏற்படுததும் பாவனை மட்டத்தை தாண்டிவிட்டமை தெரியவந்தது. இது தொடர்பான ஆராய்ச்சி மிகவும் முனைப்பாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இவ்வாறு நைதரசன் உரச்செறிவு அதிகரிப்பது எமது வருங்காலத் தாய்மார்கள் நீலக் குழந்தைகளைப் பெறக்கூடிய நிலைக்கு இட்டுச் செல்லலாம் எனக் கருதப்படுகிறது. நீலக்குழந்தை விளைவானது (**Blue Baby Effect**) உரத்தில உள்ள நைதரசன் உணவின் ஊடாகவும், நீரின் ஊடாகவும் தாயை அடைந்து அதிலிருந்து பிள்ளைக்குச் செலவதால ஏற்படும் ஒரு பாரிய விளைவாகும.

செயற்கை இரசாயனங்களைத் தவிர்த்து குப்பை போன்ற இயறகைப் பசளைகளைப் பயன்படுத்தும் போது கூட நாம் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம் ஏனெனில், குப்பை கூழங்களுடன் கலந்திருக்கும் ஈயம், இரசம் போன்ற காரலோகங்கள் நிலத்தை அடைந்து தாவரங்களால் வேகமாக உறிஞ்சப்பட்டு அவற்றில் தேங்குகின்றன. பின்னர் அவற்றை நாம் உணவாக உள்ளெடுக்கும் போது எம்மையும் வந்தடைகின்றன.

விவசாய விளைபொருட்கள களஞ்சியங்களை அடைந்ததும், அங்கு வேறு பல இரசாயன சேர்க்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. பாதுகாப்பு இரசாயனங்கள் (**Preservatives**) நிறப பொருட்கள் (**Colourings**), வாசனைப் பொருட்கள் (**Flavouring agents**) இனிப்பூட்டும் இரசாயனங்கள் (**Sweetening agents**), ஒட்சியேற்ற எதிர்ப்பு இரசாயனங்கள் (**Antioxidants**) போன்றன இவற்றுள் சிலவாகும். சக்கரினும கோழிச்சாயமும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பண்டங்களை திருவிழாக் காலங்களில் சிறுவாகள் போட்டியிட்டு வாங்கி உண்பதை நீங்கள பார்திருப்பீர்கள். இவையெல்லாம் எமது உடலுக்கு ஆபத்தானவையாக அமையலாம்.

தை தொடக்கம் பங்குனி வரை உளளூர் உருளைக்கிழங்கு சந்தைக்கு வரும் இது ஒரு வரவேற்கத்தக்க உள்ளூர் முயற்சி. இதற்குத் தேவையான விதை கிழக்கு நெதர்லாந்து போன்ற வெளிநாடுகளில் இருந்து வருகிறது. பல இரசாயனங்களில் பதனிடப்பட்டே இவை எம் தேசத்தை அடைகின்றன. பெட்டி உடைத்தவுடன மணணில் நாட்டத்தக்கதாகவே இவை வருகின்றன. ஆனால் காறறுள்ள போதே தூற்றிக்கொள்ளும், காசே கடவுளாய்க் கொண்ட சிலர் மருந்தேற்றப்பட்ட விதை உருளைக்கிழங்கையும் விற்றுக் காசாக்குகிறார்கள். அருமைக் காலத்தில் பெருமையாகச் சாப்பிடுவோர் இக் கிழங்குகளின் மூலம் விசம் உட்செல்வதை அறிந்தால் வருங்காலத்தில் இவ்வாறானவற்றை வாங்கார் என நம்பிக்கை கொள்ளலாம்.

தற்போது யாழ்.நகரப பகுதிகளில் சில விற்பனை நிலையங்களில் வாடாமல் வதங்காமல் பொலிவோடு விற்பனைக்கு இருக்கும் கொழும்புத் தோடையும் அப்பிளும் எம்மவர்களைக் கவர்நதிழுப்பதில் வியப்பில்லை. ஆனால் எவ்வாறு இவை வாடாமல் இவ்வாறு கவர்ச்சியாக தோற்றமளிக்கின்றன என்பது தெரிந்திருக்க நியாயமில்லை. இது பற்றி விசாரித்தபோது இவை கண்ணுக்குப் புலப்படாத, மெல்லிய பிளாஸ்ரிக்கால் கவரிங் செய்யப்பட்டு இவை கொழும்பிலிருந்து வருவதாக அறிய முடிந்தது. தோலுடன் இவற்றை உண்ணும்போது இவை ஏற்படுத்தும் விளைவுகள் அபாயமானவை.

இந்த ஆபத்துச் சங்கிலி இத்துடன் முடியவில்லை. ஊர்களில் பலசரக்குக் கடைகளில் விற்கும் பொருட்களின் பட்டியல் மா, சீனி, அரிசி எனத் தொடங்கி சில்லறை சாமான்கள் ஊடாக மலத்தியோன், மண்ணெண்ணை வரை நீளும். அன்றாடம் பாவிக்கின்ற மரக்கறிகளும் இவற்றில் பொதுவாக உள்ளடக்கப்பட்டு இருக்கும். இக்கடைகளில மனிதனின கவலையீனத்தாலோ அல்லது எலிபோன்ற இராப் பிராணிகளாலோ இரசாயனப்பதார்ததங்கள் உணவுப் பொருட்களுடன் கலக்கப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம், இவ்வாறான பொருள்களை வாங்கும் போது நாம் எச்சரிக்கையாக இருத்தல் மிகவும் அவசியமாகும்.

வீடுகளிலும்கூட வாங்கிவந்த காய்கறிகளைப் பூச்சி மருந்துகள், மண்ணெண்ணை போன்றவற்றுடன் சேர்த்துக் களஞ்சியப் படுததி வைத்திருப்பார்கள். இவை தவறுதலாகவோ வேறு முறைகளிலோ கலக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம். உரிய முறையில் களஞ்சியப்படுத்துவதன் மூலம் இவ்வாறான சேதங்களை நாம் தவிர்க்கலாம.

உரிய முறையில், பலமுறை நீருள் காய்கறிகளைக் கழுவுவதன் மூலம் அவற்றில் உள்ள நஞ்சுகளை பெருமளவில் அகற்றலாம். பச்சையாக உணணுவதைத் தவிர்ப்பதன் மூலமும் நாம் இவற்றின் பாதிப்புக்களில் இருந்து ஓரளவு எம்மைப் பாதுகாக்கலாம்.

அத்துடன் செயற்கை இரசாயனங்களின் பாவனைக்கு உளளாகாத, காய கறிகளை பயன்படுத்துவது சாலச் சிறந்தது சூத்தையல்லாத கத்தரிக்காய் வாங்குவது என்று கூறி அதிகவிலை கொடுத்து இரசாயனங்கள் சோந்த காய் கறிகளை வாங்குகின்றோம்.

நோய்நாடி, நோய்முதல் நாடி எப்பிரச்சினையை அணுகினாலும் அது பலன்தரும். விவசாயிகளின் எண்ணங்களிலும் நடவடிக்கைகளிலும் ஏற்படும் மாற்றங்கள் மூலம் எதிர்கால விவசாய நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்பட்டால், பாரிய அளவிலான திருப்பங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் விவசாய இரசாயனங்களின் பாவனை பற்றிய சரியான தகவல்களை உரிய முறையில் வெளிக்கொணர்தல் மூலமும், உளளூர் விவசாயக் கழகங்கள் கருத்தரங்குகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலமும் இவ்விலக்கை எட்டமுடியும். அத்துடன செயற்கை இரசாயனங்களின் பாவனையை மட்டுப்படுத்தி இயற்கை உரங்களின் பாவனை வலியுறுத்தப்பட வேண்டும்.

விவசாயிகள் மட்டுமல்லாது உணவு களஞ்சியப்படுத்துவோர், விநியோகஸ்தர்கள், வியாபாரிகள், நுகர்வோர் போன்றோரும் உணவுப் பொருட்களிலும் இரசாயனக் கலப்பு ஏற்படாது இருப்பதற்காக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எனவே, எமது உணவில் விவசாய இரசாயனங்களின் சேர்க்கையை தடுப்பதற்கு மிகவும் சிறந்தவழி வீட்டுத் தோட்டம் அமைதலாகும். குரோட்டன்களையும் வேறு பயனற்ற அழகு மரங்களையும் பிடுங்கிவிட்டு உங்கள் முற்றத்தை கத்தரி, வெண்டி, மிளகாய்ச செடிகளாலும் வரம்புகளிலுள்ள லில்லி மரங்களைப் பிடுங்கி வெங்காயத் தடல்களாலும முற்றத்துப் பந்தலை பாகல, பயிற்றை போன்றவற்றாலும் அலங்கரியுங்கள்.

**த.சுவேதனன்**

நன்றி

---

## தேசிய கல்விக் கொள்கையை தயாரிக்க விசேட கவனம்

**சுசில் பிரேம ஜயந்த**

தேசிய கல்விக்கொள்கையொன்றை துரிதமாக தயாரிபபது தொடர்பாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

கல்வித்துறையிலுள்ள சகல அமைப்புக்களின் யோசனைகளையும் அமைச்சர் இது தொடர்பில் கோரியுள்ளார். கல்வியமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேடகூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

மஹிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்டவாறு தேசிய கல்விக் கொள்கையை விரைவாக தயாரிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். ஆசிரியர் சேவைக்கு மேலும் 2 ஆயிரத்து 800 பட்டதாரிகளை சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் எனவும் ஆசிரியர் சேவையில் நிலவும் சம்பளப் பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு காணப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

---

## குறைந்த வட்டியில் கடன்

ஊழிய சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கான குறைந்த வட்டி வழங்கும் வீடமைப்புக்கடன் திட்டம் இன்று தொடக்கம் அமுல் செய்யப்படவுள்ளது.

4 சதவீத வட்டியில் இந்தக் கடனகள் வழங்கப்படும். ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்கள் 3 இலட்சம் ரூபாவை இந்தத் திட்டத்தின் கீழ் கடனாகப் பெற்றுக்கொள்ளலாம். அரச நட்டஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் இநதக் கடன்களை வழங்குகின்றன. இதற்காக மத்திய வங்கி இந்த இரண்டு நிறுவனங்களுக்கும்25 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. (த-7)

---

## இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பு உருவாகும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து கூட்டமைப்பொன்றை ஏற்படுத்திக்கொள்ளவிருக்கின்றன என்று ஜனநாயக இடதுசாரிய முன்னணியின் தலைவா வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தையும், ஜனநாயகத்தையும் வலுப்படுத்துவதே இந்தக் கூட்டமைப்பின் நோக்கமாகும்.

கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் வெள்ளியன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவத்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், ஜனாதிபதி மக்களின் ஆதரவுடன் பலமான அரசாங்க மொன்றை உருவாக்கிக்கொள்வதற்கு உதவுவதே இன்று இடதுசாரிக் கட்சிகள் மீது ஒபபடைக்கப்பட்டுள்ள முக்கிய பணியாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் ஈட்டிய வெற்றியின்போது மேற்கொள்ளப்பட்ட பணிகள் பற்றியும் எதிர்கால உத்திகள் பற்றியும் மதிப்பிடுவதற்காக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. (அ-9)

# தேசவழமைச் சட்டத்தின் கீழ் ஆதன வழியுரிமை பெறல் - ஓர் ஆய்வு

② (தொடர்ச்சி)

## ஆதனங்கள் வழியுரிமையாக சென்றடையும் விதம்

முதுசம், சீதனம், தேடிய தேட்டம் அல்லது கொள்ளப்பட்ட ஆதனம் போன்றவை பெற்றோரின் இறப்பின் மீது முதலில் சீதனம் பெற்ற பெண் பிள்ளை தவிர்த்து ஏனைய பிள்ளைகளுக்கு **(Descendants)** சம பங்காக சென்றடையும். திருமணம் செய்து சீதனம் பெறாத, திருமணம் செய்யாத பெண் பிள்ளைகளுக்கும், திருமணம் செய்த, செய்யாத எல்லா ஆண் பிள்ளைகளுக்கும் பெற்றோரின் சொத்து முதலில் சம பங்காக வழியுரிமையாக சென்றடையும்.

பெற்றோருக்கு முன்னர் பிள்ளை இறப்பின் அவ் இறந்த பிள்ளையின் பிள்ளைகளுக்கு அவருடைய பங்கு அவ் இறந்தவரின் எல்லாப் பிள்ளைகளுக்கும் பெற்றோரிடம் சீதனம் பெற்ற பெண்பிள்ளை தவிர்த்து சம பங்காக சென்றடையும். எனினும்,

வயது முதிர்ச்சி சட்டம் **(Ageofmajority act)** இன்படி 18 வயதை பூர்த்தி செய்யாத எந்தப் பிள்ளையும் தமது சொத்தை விற்க, ஈடுவைக்க வேறு வகையில் கைமாற்றம் செய்ய முடியாது. எனினும் பிள்ளையின் நலன், படிப்பு போன்ற காரணத்திற்காக மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியுடன் பாதுகாவலர் **(Guardian)** பராயமடையாத பிள்ளையின் சொத்தை குறிப்பிட்டளவு நீதிமனற சொற்படி விற்கலாம், ஈடுவைக்கலாம்.

ஆண் பிள்ளைகள் திருமணம் செய்தாலென்ன செய்யாவிட்டாலென்ன அவர்கள் எல்லோரும் பெற்றோரின் சொத்தில் வழியுரிமை பெறுவர். பெண் பிள்ளைகள் சீதனம் பெறாத அதாவது பெற்றோர் சீதனம் கொடுக்காத இங்கு ஒரு திருமணம் ஆன சகோதரன் தனது தனிப்பட்ட ஆதனத்தில் அல்லது தனது மனைவியுடன் சேர்ந்து தனது சகோதரிக்கு சீதனம் கொடுத்தால் அது பெற்றோரின் சொத்தில் அப்பெண் பிள்ளைக்கு வழியுரிமையைக் கொடுக்கும். எனவே பெற்றோர் சீதனம் கொடாத பெண் பிள்ளையும், திருமணம் ஆகாத பெண் பிள்ளையும் பெற்றோர் சொத்தில் வழியுரிமையைச் சமபங்காக பெறுவர்.

திருமணமான தம்பதியருக்குப் பிள்ளைகள இல்லாவிட்டால் கணவரின் சொத்து அவரின் தாய் தந்தையருக்கும், மனைவியின் சொத்து அவரின் தா்ய் தந்தையருக்கும் சென்றடையும் **(Asendants)**. தேடிய தேட்ட ஆதனம் <u>மாணிக்கவாசகர்</u> Vs <u>கந்தசாமி</u> வழக்குப்படி உரிய விகிதப்படி அவரவர் பங்கு அவரவர் பெற்றோரை சென்றடையும்.

பெற்றோரில் ஒருவர் இறப்பின் அரைப் பங்கு உயிர்வாழும் பெற்றோருக்கும் மிகுதி அரைப்பங்கு சகோதர வழி உரிமையாக **(Urumai)** எல்லா சகோதரங்களுக்கும் சென்றடையும். இங்கு சீதனம் கொடுத்த சகோதரிக்கும் சென்றடையும். சகோதர வழி உரிமை சகல சகோதரங்களுக்கும் **(Collaterals)** உரியது எனலாம். எல்லா சகோதரங்களும் தமக்கு வரும் பங்கை சம பங்காக பிரிக்க வேண்டும். சகோதரங்கள் இறப்பின் அவர்களின் எல்லாப் பிள்ளைகளுக்கும் சமபங்காக சென்றடையும். அப்போது சீதனம் பெற்றோர் கொடுத்த பெண் பிள்ளைக்கு அப்பங்கு சென்றடையாது. இது <u>வள்ளிப்பிள்ளை</u> **Vs** <u>சரவண முத்து</u> வழக்கில் கூறப்பட்டது. ஆனால் சீதனம் போதாமையை காட்டி வழக்கிட்டு இதிலும் பங்கு பெறலாம்.

பெற்றோர் இருவரும் இறந்தால் அவரவர் தனிப்பட்ட சொத்து கணவருடையது அவரது சகோதரங்களுக்கும், மனைவியுடையது அவரதுசகோதரங்களுக்கும் எல்லா சகோதரங்களுக்கும் சமபங்காக சென்றடையும். சகோதரம் இறப்பின் அவரின் பிள்ளைகளுக்கு சீதனம் கொடுத்த பெண் பிள்ளை (பெற்றோரால்) தவிர்த்து சம பங்காக சென்றடையும். தேடிய தேட்ட ஆதனம் அவரவர் அரைப்பங்கு அவரவர் சகோதரங்களை சென்றடையும். இது கணவன், மனைவிக்கு பிள்ளைகள் இல்லாது பெற்றோரும் இறக்கும் சந்தர்ப்பத்தில் ஆகும்.

நெறிமுறையற்ற பிள்ளைகள் தாயின் **(illegitimate)** (பிரிவு 34) சொத்தில் பங்கு கோர முடியும். அத்துடன் தமது நெறிமுறையான **(Legitimate)** சகோதரம் அல்லது நெறிமுறையற்ற ஏனைய சகோதரங்களின் சொத்தில் சகோதர வழியுரிமை **(Urumai)** ஆக பங்கு கோரலாம் என <u>சண்முகம்</u> **Vs** <u>தந்தையா</u> 23 **NLR** 221 வழக்கில் தீர்க்கப்பட்டது. தற்போது தந்தை யார் என்பதனை டி.என்.ஏ.**(D.N.A)** பரிசோதனை மூலம் நிருபித்து தந்தையின் சொத்தில் பங்கு கோரி நெறிமுறையற்ற பிள்ளை வழக்கு தாக்கல் செய்யலாம். தாயின் வயிற்றில் இருக்கும் பிள்ளையும் இதனுள் அடங்கும் (பிரிவு 33).

சொத்துக்கள் எப்போதும் **Decending, Ascending, Collaterals** என்ற ஒழுங்கு விதியின்படியே செல்லும் என <u>பூதத்தம்பி</u> **Vs** <u>மயில்வாகனம்</u> 3**NLR** 42 வழக்கில் கூறப்பட்டது. **Decending** என்றால் பிள்ளைகளுக்கும் **Ascending** என்றால் தாய், தந்தைக்கும் **Collaterals** என்றால் சகோதரங்களுக்கும் என வழியுரிமை சென்றடையும்.

ஒருவர் பிள்ளைகள் இன்றியும் சகோதரங்கள் இன்றியும் இறப்பின் அவர் ஆணாயின் அவரின் பிதா உயிருடன் இல்லாது இருப்பின் பிதாவழி வந்த ஆதனம் தேடிய தேட்ட பங்கு உட்பட அரைப்பங்கு பிதாவின் சகோதரங்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் (பிரிவு24) சென்றடையும். மாதா உயிருடன் இல்லாது இருப்பின் மாதா வழி வந்த ஆதனம் தேடிய தேட்டம் அரைப் பங்கு உட்பட மாதாவின் சகோதரங்களுக்கும் அவர்களின் எல்லாப் பிள்ளைகளுக்கும் சென்றடையும். இது நெறிமுறையற்ற பிள்ளைகளையும் உள்ளடக்கும் (பிரிவு 26).

சாதாரணமாக தேடிய தேட்டம் அரைப் பங்கு மனைவிக்கும் அரைப்பங்கு கணவருக்கும் அவரவர் இறப்பின்போது சென்றடையும். இருவரும் இறப்பின் அவரவர் தேடிய தேட்டம் பிள்ளைகளுக்கு சமபங்காக இங்கு சீதனம் பெற்ற பெண் பிள்ளை தவிர்த்து சென்றடையும். பிள்ளைகள் இல்லாதுவிட்டால் <u>பூதத்தம்பி</u> **Vs** <u>மயில்வாகனம்</u> 3 **NLR** 42 வழக்கு தீர்ப்பின்படி **Ascending Line** என்ற முறையில் பெற்றோரை சமபங்காக சென்றடையும். பெற்றோரில் ஒருவர் மட்டும் உயிருடன் இருப்பின் அவருக்கு அவர் கணவரின் பெற்றோராயின் அவருடைய அரைப்பங்கில் அரை வாசி அதாவது கால்பங்கு உயிருடன் இருக்கும் பெற்றோருக்கும் மிகுதி கால்பங்கு கணவரின் சகோதரங்களுக்கு சம பங்காக சென்றடையும். பெற்றோரும் உயிருடன் இல்லாவிட்டால் சகோதரங்களுக்கு சம பங்காக உரிய அரைப்பங்கு சென்றடையும். சகோதரங்களும் இல்லாவிட்டால் கணவரின் பெற்றோரின் சகோதரங்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் சென்றடையும். அதேபோல் மனைவியின் அரைப் பங்கு தேடிய தேட்ட ஆதனம் பிள்ளைகள் இருந்தால் பிள்ளைகளுககு சமபங்காக செல்லும். பிள்ளைகள் இல்லாவிட்டால் மனைவியின் உயிருடன் இருக்கும் பெற்றோருக்கும் ஒரு பெற்றோர் உயிருடன் இருப்பின் தன்னுடைய தேடிய தேட்ட அரைப்பங்கில் அரைவாசி அதாவது கால் வாசி உயிருடன் இருக்கும் பெற்றோருக்கும் மிகுதி கால்வாசி எல்லா சகோதரங்களுக்கும் அவர்களின் எல்லாப் பிள்ளைகளுக்கும் சென்றடையும்.

ஒருவருக்கு பிள்ளைகள் இல்லாவிட்டால் அவரின் பெற்றோரும் இறந்திருப்பின் பெற்றோரின் தாய், தந்தை உயிருடன் இருப்பின் அவர்களுக்கு இருவரின் சொத்து சென்றடையும். இது <u>மார்க்கண்ட</u> **Vs** <u>வைத்திலிங்கம</u> வழக்கில் பாட்டன், பாட்டியில் ஒருவர் உயிருடன் இருப்பினும் அவருக்கே முழு சொத்தும் சென்றடையும். இங்கு தாய்வழி வந்த ஆதனம் தாய் வழிக்கும் தந்தை வழிவந்த ஆதனம் தந்தை வழிக்கும் செல்லும் என்பதே தேசவழமை கோட்பாடு ஆகும் (பிரிவு24). இவர்களும் இல்லாவிட்டால் தந்தை வழி வந்த ஆதனம் தந்தைவழி மாமன், மாமிக்கும் தாய்வழிவந்த ஆதனம் தாய்வழி மாமன், மாமிக்கும் சரிசமமாக சென்றடையும் (பிரிவு28).

தாய் இருதார மணம் புரியின் அதாவது முதலாவது கணவரைவிட்டு அல்லது கணவரின் இறப்பின்பின் இரண்டாவது திருமணம் முடிப்பின் அவர் எத்திருமணம் சீதனம, தேடிய தேட்டம், முதுசம் பெற்றாரோ அது அத்திருமணத்தால் வந்த பிள்ளைகளுக்கு மட்டுமே சென்றடையும். இங்கு சீதனம் பெற்ற பெண்பிள்ளை தவிர்க்கப்படும். கணவரின் சொத்து கணவர் இருமுறை மணம்புரியின் **Teypar Vs Sivahamipillai** வழக்கின்படி எல்லா திருமண பிள்ளைகளுக்கும் அவரின் முதுச, தேடிய தேட்ட ஆதனம் சமபங்காக சென்றடையும். இங்கும சீதனம் கொடுத்து திருமணம் செய்த பெண் பிள்ளை தவிர்க்கப்படும். பொதுவாக தாயின் தனிப்பட்ட ஆதனம் அவருடைய சகலபிள்ளைகளுக்கும் சம உரித்தை வழங்கும் (பிரிவு22).

மேலே குறிப்பிட்டபடி சொத்து பகிரப்பட்டு (10) பத்து தலைமுறைக்கு அச்சொத்தை பகிர யாரும் இல்லாவிட்டால் அது பிரிவு 32 இன் கீழ் அச்சொத்து அரசாங்கத்தை சென்றடையும்.

## உறுதி எழுதும் போது கவனிக்க வேண்டியவை

தேசவழமைக்கு உட்பட்ட பெண் தனது திருமண காலத்தில் கணவனின் கையொப்பம் மூலமான சம்மதம் இன்றி தனது தனிப்பட்ட சொத்தையும் கைமாற்ற முடியாது. இதனை தேசவழமைச் சட்டத்தின் கீழ் கணவனுக்கு திருமண ரீதியாக வந்த உரிமை **(Marital Power of the Husband)** எனலாம். கணவன் கையொப்பம் இல்லாவிட்டால் உறுதி செல்லாது. கணவனைப் பரிந்து வாழின் நீதிமன்ற அனுமதி பெற்று உறுதி முடிக்கவேண்டும். சட்டப்படி விவாகரத்து அல்லது கணவன் இறந்து கைம்பெண் ஆன பெண்ணும் திருமணம் செய்யாத 18 வயதுக்கு மேற்பட்ட பெண்ணும் மட்டுமே தனது தனிப்பட்ட சொத்தை கையுதிர்க்க முடியும். கணவனுக்கு இந்த நிலை இல்லை. அவர் தனிப்பட செயற்படமுடியும். திருமணம் முடித்த பின்பு தனிப்பட்ட ரீதியில் சொத்து வாங்க விரும்பின் மனைவி தனது சீதனப் பணம் மூலம் வாங்கும சொத்து எனவும், கணவன் தனது தனிப்பட்ட பெயரில் சொத்து வாங்க விரும்பின் தனது பெற்றோரின் முதுசப் பணத்தல் வாங்குவதாகவும் உறுதியில் வெளிப்படுத்தினால் மட்டுமே அவரவர் தனிபபட்ட ஆதனமாக அமையும். வெறுமனே தனிப் பெயரில் உறுதி எழுதினாலும் இருவருக்கும் சமபங்காக தேடிய தேட்டமாகவே அமையும்.

மேலும், நன்கொடை, சீதன உறுதியில் சீவிய உரித்துமட்டும் அத்துடன் நன்கொடை உறுதியில் அதனை அழிக்கும் உரித்துமட்டும் வைக்கமுடியும். வெளியார் நன்கொடை கொடுப்பினும் அது பின்னர் குடும்ப ஆதனமாக வந்து மேற்சொன்னபடி வழியுரிமை பெறும். அறுதி உறுதியில் பெறுமதி குறைவாக விற்பின் விற்பவா சீவ்ய உரித்து வைக்கலாம். இன்னாருக்குப் பின் இன்னாருக்கு என உறுதி எழுத முடியாது. தாலிகட்டி அல்லது பதிவுத் திருமணம் நடைபெறமுன் கணவனாக வரப்போகும் நபரின் பெயரை குறிப்பிட்டு சீதன உறுதி எழுத முடியாது. □

சட்டத்தரணி
ச.சிவரூபன்

# மஹிந்தவின் திட்டத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

இன்று முதல் 50 கிலோ உரத்தை 350 ரூபாவிற்கு வழங்க முடியாது என்று சிறிலங்காவின் 5 முன்னணி உர நிறுவனங்கள் தெரிவத்துள்ளன.

யூரியா உட்பட்ட உரங்களுக்கு மானியம் வழங்குகையில் அது தொடர்பில் உர இறக்குமதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி உடன்பாட்டுக்கு வருவதுடன் அதுதொடர்பில் உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட வேண்டும்.

ஆனால் விவசாய அமைச்சோ அரசாங்கத்தின் ஏனைய பொறுப்பு வாய்ந்த எவருமோ இது குறித்து உர நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்தவில்லை என்றும் அந்த நிறுவனங்களின் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக பெரும்போகத்தின் போது 3 இலட்சம் மெட்றிக்தொன் உரம் தேவைபபடுகிறது. இதில் 75 வீதத்தினை தங்களின் நிறுவனங்களே வழங்குவதாக தெரிவிக்கும் அந்த அதிகாரிகள், தேவையான அளவு உரம், தங்களின் களஞ்சியசாலைகளில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

உர நிறுவனங்களின் தொகையை கணக்கெடுத்து அதற்கான மானியத்தை விவசாய அமைச்சு தீர்மானித்த பின்னரே 350 ரூபாவிற்கு உரத்தை வழங்க முடியுமே தவிர, அதற்கு முன்னர் வழங்க முடியாது என்றும் உர நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இன்று முதல் 350 ரூபாவிற்கு உரம் வழங்கப்போவதாக தெரிவிக்கும் அரசாங்கம் நேற்று மாலை வரை உர நிறுவனங்களுடன் ஒரு வார்த்தையைக் கூட பேசவில்லை.

அரசாங்கம் தங்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும் வரை 50 கிலோ யூரியா உரத்தினை 550 ரூபாவிற்கும் ஏனைய உரங்களை பழைய விலைக்குமே வழங்க வேண்டியேற்படும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

யூரியா உரத்திற்கான நிவாரணமாக தங்கள் 5 நிறுவனங்களுக்கும் அரசாங்கம் வழங்கவேண்டிய தொகையான 200 கோடி ரூபா இனனும நிலுவையில் இருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (த)

# நாயினால் கடியுண்டு மரணம்

(சுதுமலை)

கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கட்டாக்காலி நாயினால் கடியுண்டு சரியான முறையில் தடுப்பூசி ஏற்றாத காரணத்தால் இருவர் மரணம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கட்டாக்காலி நாயகளின் தொகை அதிகரித்துக் காணப்படுதல், பொதுமக்கள் தத்தமது வளர்ப்பு நாய்களிற்கு சரியான முறையில் உரிய தடுப்பூசிகளை போடாது விடுதல் மற்றும் நாய்க் கடிக்கு இலக்கானதும் அதைப் பெரிதுபடுத்தாது உரிய வகையில் விலங்கு விசர் தடுப்பூசி மற்றும் ஏற்பு நோய்க்கான தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதமை காரணத்தினாலே இவ் அநியாய உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பராந்திய தொற்று நோய் வைத்திய அதிகாரி கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி பிராந்திய தொற்று நோய் வைத்திய அதிகாரியின் குழுவினா நாயினால் கடியுண்டு இறந்தவர்களின் வீடுகளிற்கு நேரில் சென்று இதுதொடர்பான பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் இனிமேலும் இவ்வாறான உயிரிழப்புகள் ஏற்படாதவாறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு பல்வேறு செயற்திட்டங்களை இங்கு நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-252)

# எயிட்ஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்காக உலக வங்கி 120 கோடி ரூபா வழங்கியது

(கொழும்பு)

இலங்கையின் எயிட்ஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கென 120 கோடி ரூபாவை உலகவங்கி இதுவரை வழங்கியுள்ளது எனறு சுகாதார மற்றும் போசாக்கு அமைச்சு தெரிவித்துள்ளது.

5 வருடகாலப் பகுதியில் இந்த உதவித் தொகை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தொகையின் 70 சதவீத மான பகுதி அடுத்த இரண்டு வருடகால நடவடிக்கைகளுக்கென ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

அதேசமயம் அரசசார்பற்ற நிறுவனங் கள் பெற்றுக்கொண்ட தொகை 30 கோடி ரூபாவாகும். எயிட்ஸ் நோய் ஒழிப்புத் திட்டம் பலதரப்பட்ட முக்கிய நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றது.

ஆசிய நாடுகள் பலவற்றில் இது துரித மாக பரவிவருகின்ற போதிலும் இலங்கையில் அதன் தாக்கம் அதிகளவில் இல்லை என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(த-9)

# விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சகல உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான விசேட கூட்டம இன்றைய தினம் வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான விசேட கூட்டம் நாளைய தினம் நடைபெறுவதுடன் தரம் 9 இற்கான ஆங்கிலம் மற்றும் உடற்கல்விப் பாடங்களுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி நாளை ஊர்காவற்றுறைக் கோட்டத்தில் நடைபெறவுள்ளது. (த-7)

# அடுத்துக் கெடுக்கும் அலர்ஜி!

'எனக்கு அவனைப் பார்த்தாலே அலர்ஜி!'

'பெனிசிலின் ஊசிபோட்டு அலர்ஜி வந்து அவன் செத்துப் பிழைத்தான்'

'அந்த ஹோட்டலில் சாப்பிட்டால் எனக்கு உடனே அலர்ஜி வந்துவிடுகின்றது!'

இவ்வாறு வெகு சாதாரணமாகப் பயன் படுத்தப்படும் 'அலர்ஜி' என்ற வார்த்தை, மருத்துவத்திலிருந்து இரவல் வாங்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையில் ஒட்டிக்கொண்டுள்ளது.

இந்நோயைப் பற்றிய தவறான பல்வேறு கருத்துக்கள் பெரும்பாலான மக்களிடையே இருக்கின்றன.

வந்த இந்நோயைப் பரிபூரணமாகக் குணமாக்க முடியாது. ஆனால் கட்டுக்குள்தான் வைக்க முடியும் என்ற கருத்தும் அலோபதி மற்றும் பல்வேறு மருத்துவம் பயின்ற மருத்துவர்களிடையேயும் பரவலாகக் காணப்படுகின்றது.

## அலர்ஜி என்றால் என்ன?

இதற்குத் தமிழில் ஒவ்வாமை என்று கூறுவார்கள். நாம் உட்கொள்ளும் உணவுப் பொருட்கள், சுவாசிக்கும்போது உள்ளே செல்லும் தெரு அல்லது வீட்டுத் தூசி, மேலே தடவிக் கொள்ளும் களிம்புகள், பவுடர், சென்ட், சோப்பு, அணியும் உடைகள், நகை மற்றும் மன உளைச்சல், மன அழுத்தம் (Tension) இவற்றின் விளைவாக உடலில் அசாதாரணமாக உண்டாகும் ஒருவித உடல் மாறுதலை 'அலர்ஜி' என்று சொல்லலாம். சில வகையான ஊசிகள், மாத்திரைகள் இவற்றைப் பயன்படுத்துவதாலும் இம்மாதிரி உடலில் மாறுதல் வரலாம். ஆக, இதுவரை நம் உடலுக்கு ஒத்துப் போகும் அனைத்தும் திடீரென ஒத்துப் போகாமல் போவதே 'அலர்ஜி'யாகும்.

## அலர்ஜியால் உண்டாகும் தொல்லைகள்

இதனால் ஏற்படும் தொந்தரவுகள் எந்தெந்த உறுப்புக்களைத் தாக்குகின்றதோ அவற்றைப் பொறுத்து மாறுபடுகின்றன.

அடிக்கடி சளி பிடித்து, மூக்கடைபட்டு, நாசியில் ஓர் அரிப்பு ஏற்பட்டு காலையில் எழுந்தவுடன் தொடர்ந்து தும்மலோ, திடீரென்று குளிர்காற்று படுவதாலோ, ஒரு அறையைப் பெருக்குவதாலோ, பழைய அழுக்கு ஏறிய புத்தகங்களைத் தட்டுவதாலோ அலர்ஜி ஆரம்பமாகலாம்.

அலர்ஜி சுவாசக் குழாயைத் தாக்கினால் ஆஸ்துமா வரலாம். அலர்ஜிக் சைனசைடிசும் (Allergic sinusitis) பொடி, வறட்டு இருமலும் வரலாம்.

நாம் அன்றாடம் உண்ணும் உணவிலும், மீன், முட்டை, எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற பழங்கள் ஆகியவற்றினாலும் அலர்ஜி ஏற்படலாம்.

சில தின்பண்டங்களைச் சாப்பிட்டவுடன் உதடெல்லாம் பூச்சிக்கடி போன்ற தடிப்பு அல்லது மூச்சிரைப்பு வரலாம்.

இது தவிர ஆகாரப் பொருட்களிலே குறிப பாகச சொக்லெட், பாலாடைக் கட்டி, தயிர், மாமிசம் போன்ற அலர்ஜி இருந்தால் வயிற்றுப் போக்கு, வாந்தி, தலைவலி, ஜீரண சகதி, இழுப்பு, வயிற்று வலி என வெளிப்படுதலும் உண்டு.

மருந்துகளினாலும் அலர்ஜி வருவதுண்டு. பென்சிலின், சல்பா, அஸ்பிரின், அனர்ஜின் போன்றவை பயன்படுத்திச் சிலர் உயிரிழப்பதை அடிக்கடி செய்தித்தாள்களில் பார்க்கிறோம்.

தற்கால மருத்துவத்தில் புதிய பல மருந்து, மாத்திரைகள், ஊசிகள் வந்த வண்ணம் உள்ளன. அவற்றினாலும் வெவ்வேறு வகையான அலர்ஜிகளான தோல் தடிபபு (Urticaria) ஆஸ்துமா போன்றவை வரலாம். அல்லது உள் உறுபபுகளில் கெடுதல் உண்டாகி மஞ்சட் காமாலை போன்றவை வரலாம். உதாரண்மாகக் காசநோய்க்குக் கொடுக்கப்படும் I.N.H மாத்திரை கோளாறுகளை ஏற்படுத்தலாம்.

ஒருவரது குடும்பத்தில் அலர்ஜி இல்லாமல் இருந்தால் கூட மருந்தினால் அலர்ஜி வருவதற்கு வழியுண்டு.

பூக்களின் மணத்தை நுகர்ந்தால் அதிலுள்ள மகரந்தத் தூளால் சிலருக்கு திடீரெனக் காய்ச்சல், தலைவலி வரும். சில நேரங்களில் தும்மலும், மூக்கரிப்பும் ஏற்பட்டு ஆஸ்துமாவும் வரும்.

## தோல் அலர்ஜி!

தோலில் ஏற்படும் அலர்ஜி மூன்று விதங்களில் வெளிப்படும்.

**முதல் வகை:** தோல் அலர்ஜி பொதுவாகக் குழந்தைகளுக்கு வரும் சொறி, சிரங்கு (Eczema) போன்றவை. கை, கால், முழங்கால், இடுக்கு, அக்குள் போன்ற இடங்களில் உயிரற்ற தோல் செதில்கள் இருப்பதாலும், அதில் வியர்வை தங்குவதாலும் ஏற்படும். முகத்திலும் கழுத்திலும்கூட இதனால் சொறி, சிரங்கு ஏற்படும்.

**இரண்டாவது வகை:** தோல் அலர்ஜி, உலோகம், பவுடர், இரசாயனம் போன்றவற்றால் ஏற்படும். இவற்றால் தோலில் தடிப்பு (Urticaria) அரிப்பு போன்றவை ஏற்படுகின்றன.

**மூன்றாவது வகை:** தோல் அலர்ஜி மிக மோசமானது. உடல் பூராவும் சிறிய அல்லது பெரிய பெரிய தடிப்புகளாக (Giant Urticaria) வீங்கிவிடும். அதிக நமைச்சலும், காய்ச்சலும் இருக்கும். பார்ப்பதற்கே மிகவும் பயங்கரமாக இருக்கும். இவ்வகை பெரும்பாலும் வயிற்றுப் பூச்சித் தொந்தரவுகளாலும், ஊசி, மருந்து, மாத்திரைகளாலும், முக்கியமாகக் குழந்தைகளுக்கும் சில நேரங்களில் பெரியவர்களுக்கும் வரும்.

கண், உதடு, காதுகளில் ஏற்படும் அலர்ஜியால் கண்ணின் வெள்ளைப் பகுதி சிவப்பாக மாறும். கண்களில் நீர் வரும். கண் வீக்கமும் ஏற்படலாம். சில நேரங்களில் கண்களின் ஒன்று அல்லது இரண்டு இமைகளுமே காலையில் தூங்கி எழுந்தவுடன் மிகவும் பெரிதாக வீங்கிவிடும். ஆனால் நமைச்சல் (Angio oedema of eye lids) இருக்காது. பார்ப்பதற்கே பயமாக இருக்கும்.

காது நோயே இல்லாதவர்களுக்கும், திடீரெனக் காதில் சீழ் வரக் காரணம் அலர்ஜி தான். இதனால் தற்காலிகமாகக் காது கேட்காமல் கூடப் போகும்.

அலர்ஜியால் ஏற்படும் காச்சல் கூடக் கண்ணையும், காதையும் பாதிக்கும். குறைந்த பட்சம் 4-5 நாட்கள் இந்தப் பாதிப்பு இருக்கும்.

சிலருக்குத் திடீரென்று காலையில் தூங்கி எழுந்தவுடனும் மேல் அல்லது கீழ் உதடுகள் மிகவும் பெரிதாக வீங்கி (Angio oedema of Lips) முகமே மாறிவிடும். இந்த வகையான உதடு அலர்ஜியில் நமைச்சலோ அரிப்போ இருக்காது.

மிகவும் மோசமான உயிரைக் குடிக்கும் அலர்ஜி 'அனபைலாக்ஸிஸ்' (Anaphylaxis) தான். இந்த வகையான அலர்ஜியால் சுவாசம் பாதித்து, இரத்த அழுத்தம் வெகுவாகக் குறைந்துவிடும். அந்நேரங்களில் மருத்துவர்கள் அதிவிரைவாக மின்னலெனச் செயல்பட்டு முதலுதவிச் சிகிச்சையை அளித்தாலொழிய உயிரைக் காப்பாற்ற முடியாது.

இது பெரும்பாலும் ஊசி மருந்துகளினால வருவது. 'ரெஸ்ட் ஊசி' போட்டுப் பின்பு ஊசிகளைப் போட்டால் இவ்வகை அலர்ஜியைத் தடுக்கலாம்.

முன்பு சொன்ன எந்தவிதக் காரண காரியமும் இன்றிச் சிலருக்குத் திடீரெனத் தோலில் தடிப்பு ஏற்பட்டு அலர்ஜி ஏற்படும். இவ்வகையான அலர்ஜிக்கு அதிக மன அழுத்தம், மன உளைச்சல்(Psychogenic Urticaria) போன்றவை காரணங்களாக அமையலாம். ஆக, சூரியனுக்குக் கீழ் உள்ள அனைத்துப் பொருட்களினாலும், சூரிய ஒளி உட்பட (Sunallergy) யாருக்கு வேண்டுமானலும், எப்போது வேண்டுமானாலும் அலர்ஜி ஏற்படலாம். (Anything can be allergic to Any body under the sun; including the sun)

ஒவ்வொரு வினாடியும், நாம் மூச்சு இழுக்குமபோதும் உணவு உண்ணும்போதும், எண்ணிக்கைக்கு அடங்காத கிருமிகள், வைரஸ் மற்றும் புரதப் பொருட்கள் உடல் ஊடே செல்கின்றன. இவற்றுள் பல உடலுக்குக் கெடுதல் செய்யக்கூடியவை.

இது தவிர உடலில் உற்பத்தியாகும் உயிரணுக்களில் சில, அசாதாரண அமைப்பு உடையனவாய் இருந்தால், அந்த அணுக்கள் தமது பணிகளைச் சரிவரச் செய்யாமல இருப்பதோடு, புற்றுநோய் அணுக்களாகவும் மாற ஏதுவாகலாம்.

மேற்கூறிய இந்த அணுக்கள் அனைத்தையும் 'அன்னியம்' (Allergen) என்று அறிந்து, அடையாளம் கண்டு. ஞாபகம் வைத்துக் கொண்டு, அவற்றிற்குத் தக்க எதிர் அணுக்களைத் (Anti bodies) தயார் செய்வது தவிர, இம்மியூன்குளாபுலின் (Immunoglobulin) எனும் எதிர் புரதத்தையும் தயார் செய்து, இந்த உடல் எதிரிகளை (Allergens) அழிப்பது உடலுக்கு மிகவும் அவசியம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். இதைத்தான் நாங்கள் நோய்த் தடுப்புத் தன்மை (Immunity) என்கிறோம்.

இந்த உடலுக்கு உதவும், எதிர்ப்பு நிலை, அளவுக்கு மீறிப்போனால் (Over reaction) ஒரு ஒவ்வாமை நிலை ஏற்படுகின்றது. இது தான அலர்ஜி ஏற்படுவதன் விஞ்ஞான விளக்கம்.

ஆக, தடுப்புத் தன்மையும், ஒவ்வாமையும் உடல் நலனுக்காகவே எற்பட்டுள்ளதை நீங்கள் இப்போது உணர்ந்து இருப்பீர்கள். ஒவ்வாமை செயலின்றிப் போனல் தொற்று நோயும், புற்றுநோயும் உண்டாக ஏதுவாகின்றது. இப்போது உலகையே கதிகலங்கடித்துக்கொண்டிருக்கும் எயிட்ஸும் (Aids) இந்தத் தடுப்புத் தன்மை சீர்குலைவால் தான் ஏற்படுகின்றது.

சிலருக்கு அலர்ஜி எதனால் ஏற்படுகின்றது என்பதைத் துல்லியமாகக் கண்டறிய அலர்ஜி ரெஸ்ட் (Endermal Allergens skin test) தேவைப்படும். முக்கியமாகக் காற்றில் பறந்து இருக்கும் பூக்களின் மகரந்தத் தூள் (Pollens) காளான் (fungi & Spores) மற்றும் அதன் முட்டைகள், வீடு, தெரு, காகிதம், உமி போன்ற இவற்றின் தூசிகள், கரப்பான், பாச்சான், ஈக்கள், கொசு, உயிரின



மற்றும் புள்ளின எச்சங்கள், மரத்தூள், மரச்சாறு, மர உறி, பட்டைகள், அனைத்துச் சைவ, அசைவ உணவு வகைகள், காய்கறிகள், கூலப்பொடிகள், கோப்பிக்கொட்டை, தேயிலை இலை, பிசின், நொதிகள், உலோக உப்புக்கள், மற்றும் சாயங்கள் போன்றவற்றின் கரைசல்களின் ஒரு துளி எடுத்து, மிகச் சிறிய ஊசியால் வலியே இல்லாமல் தோலின் மேலோட்டமாகச் செலுத்தி 15-20 நிமிடங்கள் கழித்துப் பார்த்தால், மேற்கண்ட அலர்ஜி உள்ள பொருள்களுக்கு மட்டுமே லேசாக வட்ட வடிவ அதிகத தடிப்பு ஏற்படும். இவற்றை வைத்து மிகச் சரியாக, எப்படி எதனால் அலர்ஜி ஏற்படுகின்றது என்பதைக் கண்டுபிடிக்கலாம்.

இன்னொரு முறையில் இரத்தத்தில் அலர்ஜியினால் உண்டாகும் 'ஆன்டி பயோடிக்' மூலம் அலர்ஜியின் காரணத்தைக் கண்டுபிடிக்கலாம்.

ஒவ்வொரு உணவுப் பொருளாகப் படிப்படியாகத் தவிர்த்து, எதைத் தவிர்த்தால் அலர்ஜி வராமலிருக்கிறது எனத் தெரிந்து கொண்டு, அந்த ஆகாரத்தை ஒதுக்குவது இன்னொரு முறை (Trial and error or elimination method). இது மிகவும் கடினமான முயறசியேயாகும். சிலரால் மட்டுமே சில உணவுப் பொருட்களின் அலர்ஜியை அவர்களாகவே கண்டுபிடிக்க முடியும். எனவே உணவுப் பொருள்கள் அலர்ஜி இருப்பவர்களுக்கு முன்பு சொன்ன தோல் அலர்ஜி ரெஸ்ட் மற்றும் இரத்த ஆன்டி பயோடிக் ரெஸ்டுகள் மூலமாகவே துல்லியமாகக் காண இயலும்.

அலர்ஜி நோய் வந்து கஷ்டப்படுவதை விட, முன்னெச்சரிக்கை முறைகளைக் கையாண்டு, அலர்ஜியிலிருந்து தப்புவதே, சிறந்த வழியாகும். இது மிகவும் கடினமான ஒரு செயல் என்றாலும், கூடுமானவரை தடுப்பு முறைகளைப் பின்பற்ற முழு முயற்சி செய்ய வேண்டும்.

தூசி, தும்பு, புகை, நெடி போன்ற சூழ்நிலைகளைத் தவிர்ப்பதுடன், வீட்டில் குறிப்பாகப் படுக்கை அறையில், தூசு படியாதபடி தரையை ஈரத்துணி போட்டுத் துடைப்பது மிகவும் பயன்தரும். படுக்கை அறை படுக்கை அறையாக மட்டுமே இருக்க வேண்டும்.விளையாட்டு அரங்கமாகவும், பொருட்களைப் போட்டு வைக்கும் அறையாகவும் மாற்றப்படக்கூடாது. அதிகக் கனமுள்ளதும், கம்பளிப் போர்வைகளையும் தவிர்த்தால் நலம். தலையணைப் பஞ்சு அலர்ஜி இருப்பவர்கள், பிளாஸ்டிக் உறை போட்டு தலையணையை மூடி, அதன்மேல துணி வைத்துப் படுக்க வேண்டும். ஜில்லென்று வீசும் குளிர்ந்த காற்று, நேரடியாக அறையினுள் வராத வண்ணம், ஜன்னல்களைத் தேவையான அளவு மட்டும் திறந்து வைத்தால், இரவில் படுக்கும்போது, காற்றின் மூலம் பரவும் மகரந்தத்தாது, தூசி போன்றவற்றைத் தவிர்க்கலாம். மின்விசிறியின் கீழ் நேரடியாகப் படுக்காமலும், அதிகக் காற்று வரும்படியும் வைப்பதைக் கூடுமானவரைத் தவிர்க்கவும் வேண்டும். புகைப் பழக்கம் உள்ளவர்கள் அதை அறவே விட்டொழிக்க வேண்டும். (Nicotine, Headache, Allergy) புகை உயிருக்குப் பகை என்பதை மனதில் கொண்டு புகை பிடிப்பவர் அருகிலும் செல்லக்கூடாது. (Active & Passive smoking to be avoided)

உணவுப்பொருட்கள் அலர்ஜி இருப்பவர்கள், ஒவ்வொரு ஆகாரமாகப் படிப்படியாகத் தவிர்த்து, எதைத் தவிர்த்தால் அலர்ஜி வராமலிருக்கிறது எனத் தெரிந்துகொண்டு, அந்த ஆகாரத்தை ஒதுக்கிவிடலாம். (Elimination method) பிடித்த உணவு வகைகளை. அவை உங்களுக்கு அலர்ஜியை ஏற்படுத்தும் என்று தெரிந்தும், நிறையச் சாப்பிடுவது மிகுந்த அல்ஜியை உண்டாக்குவதுடன், சில நேரங்களில் ஆபத்தாகவும் முடியலாம்.

அலர்ஜி ஏற்பட்டு ஆஸ்துமா தோன்றினாலும், தோல் அலர்ஜி ஏற்பட்டாலும் தாங்களே 'சுய வைத்தியம்' (Self medication) செய்து கொள்ளாமல், தக்க மருத்துவர்களைக கலந்தாலோசிப்பது பின்னால் வரப் போகும், விளைவுகளைத் தவிர்க்கப்பெரிதும் உதவும்.

மருந்து, மாத்திரை, ஊசி, அலர்ஜி இருப்பவர்கள், மருந்துக் கடைகளில் கொடுக்கும் மாத்திரைகளைத் (Counter sales) தவிர்த்தல் நல்லது. அவர்கள் டாக்டர்களிடம் ஆலோசனை பெறும் முன்னே, முனகூட்டியே, என்னென்ன மாத்திரை, ஊசிகளுக்கு அலர்ஜி என்பதை மறக்காமல் தெரிவித்தால் அனபைலாக்ஸிஸ் (Anaphylaxis) என்ற உயிரைக் குடிக்கும் அலர்ஜியிலிருந்து தப்பிக்கலாம்.

அலர்ஜி உள்ளவர்கள், வீட்டுப் பிராணிகளான புறா, பூனை, நாய், முயல் போன்றவற்றை வீட்டில் வளர்ப்பதைத் தவிர்ப்பதால், அவற்றால் பின்னால் வரப்போகும் அலர்ஜி ஆஸ்துமாவை முன்கூட்டியே தவிர்த்துவிடலாம்.

வயிற்றுப் பூச்சிகளினால் அலர்ஜி இருப்பவர்கள் முறையாக, ஆறு மாதங்களுக்கு இரு முறையாவது, குடும்பத்திலுள்ள அனைவரும் வேலைக்காரர் உட்பட மருத்துவர் ஆலோசனைப்படி வயிற்றுப் பூச்சிகள் ஒழிய மாத்திரைகள் சாப்பிடுவதுடன், நகங்களை

**டாக்டர் கே.ஏ.மோகனதாஸ்**

வாரம் இரு முறை ஒட்டவெட்டுவது, ஹோட்டலில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது போன்ற சுகாதார முறைகளைக் கையாள வேண்டும்.

மேற்கண்ட அனைத்துத் தவிர்ப்பு முறைகளைக் கையாண்டும் பல்வேறு அலர்ஜி தொல்லைகளிலிருந்து மீள முடியவில்லை என்றால் 'அலர்ஜி தடுப்பூசிகளை' (Allergey vaccines), தவிர்க்கவே முடியாத - வீட்டுத் தூசி (House Dust Vaccine) வீட்டுத் தூசிப் பூச்சி (House Dust mite Vaccine) தெருத் தூசி (Street Dust Vaccine) காளான் மற்றும் அதன் முட்டைகள் (Mixed mould vaccine) போன்றவற்றிற்கு, மருத்துவர்கள் ஆலோசனைப் படி பயன்படுத்துதல் பலருக்கு மிகுந்த நிவாரணத்தைக் கொடுத்துள்ளதாக உலகெங்கும நடத்தியுள்ள ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

மேற்கூறிய அனைத்துத் தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகளில் நிவாரணம் பெறாதவர்கள் அக்குபங்சர் சிகிச்சையின் மூலமும், இந்த நோய்க்குண்டான முழு முதல் மூல காரணங்கள் கவனமாகக் கண்டறியப்பட்டு தகுந்த சிகிச்சையளிப்பதன் மூலம விரைவிலேயே குணமடைய வாய்ப்புள்ளது. □

## சந்திரிகாவுக்கு எதிர்ப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் நுழைய திட்டமிட்டுள்ளதற்கு அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம சிறி புத்திரகித்த மகாநாயக்கர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவின் இத்தகைய முயற்சி அவர் வகித்த ஜனாதிபதி பதவிக்கு இழுக்கு ஏற்படுத்துவதாகும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தன்னைச் சந்தித்த அமைச்சரவைச் செயலாளர்களுடனான சந்திப்பின் போது அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். (த)

அடிபட்டவன் உங்களைத் திருப்பி அடிக்காவிட்டால் அவனிடம் எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் அவன் உங்களை மன்னிப்பதும் இல்லை, நீங்கள் அவனை மறக்க முடிவதும் இல்லை.

- டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## யுத்தம் ஏற்படின் அதற்கான பொறுப்பை சிங்கள மக்களே ஏற்க வேண்டும்

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக இடம் பெற்று வரும் கைக்குண்டு வீச்சுச் சம்பவங்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் அச்சம் தரும் நிகழ்வுகளாகவுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் யாழ்ப்பாணத்தில் நடக்கும் நிகழ்வுகள் எதிர்பார்த்தது போல் மகிந்த ஜனாதிபதியானால் யுத்தமே வெடிக்கும் என்ற கருத்துக்கு அமைவாகவே உள்ளது.

நீர்வேலிப் பகுதியில் அப்பாவி இளைஞர்கள் இருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தினை அடுத்து யாழ்ப்பாணத்தில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதுவரை அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்தி வந்த யுத்த நிறுத்தம் மறுபரிசீலனை செய்யப்படும் என பிரசாரம் செய்த மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கிய சிங்கள மக்களே தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலைக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கா மற்றும் சந்திரிகா குமாரதுங்க போன்றவர்கள் யுத்தம் நடத்த முடியாதவர்கள் என்று நினைப்பே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமும், அவருடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பியிடமும் உள்ளது.

விடுதலைப்புலிகளுடன் ஈடுகொடுத்து போர் செய்ய முடியாதென்ற நிலையிலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசு யுத்தநிறுத்த உடன் படிக்கைக்கு உடன்பட்டது.

இந்த உண்மையை யதார்த்தத்தில் உணர்ந்து கொள்ள முடியாதவர்கள் பொதுக்கட்டமைப்பை இரத்துச் செய்தல், யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்தல் என கூறிவருகின்றனர். யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்வதென்பது எங்ஙனம் சாத்தியமாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஜனாதிபதியும் ஜே.வி.பியும் செய்து கொள்வதாக இருந்தால் அது சாத்தியமாகலாம். ஆனால் தற்போது நடைமுறையில் இருக்கும் யுத்தநிறுத்தம் என்பது அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்டதாகும்.

எனவே யுத்தநிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் செய்வதாயின் அதற்கு விடுதலைப்புலிகளின் சம்மதத்தையும் பெறவேண்டும். விடுதலைப்புலிகளின் சம்மதம் பெறப்படாத யுத்த நிறுத்த உடன்படிக்கை மீளாய்வு மற்றும் சமாதானப் பேச்சை ஆரம்பித்தல் என்ற விடயமும் வெறும் பேச்சளவிற்குச் சாத்தியமானதேயன்றி அவை நடைமுறைக்கு ஒரு போதும் சரிப்பட்டு வராது.

இராணுவப் பலம் கொண்டு விடுதலைப்புலிகளை அடக்கலாம் என்ற எண்ணப்பாடேதும் புதிய ஜனாதிபதியிடமும், ஜே.வி.பியிடமும் இருக்குமாயின் அதற்கான பரிசை சிங்கள மக்களே பெற்றுக்கொள்ள நேரிடும்.

இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான நேர் முகப்பரீட்சைகளின் போது அதில் இணைந்து கொள்கின்ற சிங்கள இளைஞர்களின் எண்ணிக்கை யதார்த்தத்தை உணர்விப்பதாக இருக்கும்.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கக் கூடாது என வலியுறுத்திவரும் ஜே.வி.பியின் உறுப்பினர்கள் கூட இராணுவ ஆட்சேர்ப்புக்கு செல்லவில்லை என்ற உண்மை சிங்கள மக்களால் புரிந்து கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

ஆக, அப்பாவிச் சிங்கள இளைஞர்களை போர்க்களத்திற்கு அனுப்புவதும், அதனூடாக பேரினவாதக் கருத்துக்களைத் தக்கவைத்து தங்களின் அரசியல் சீவனோபாயத்தை நடத்துவதுமே சிங்கள ஆட்சியாளர்களின் இலக்கு. இதற்கு சிங்கள மக்கள் இசைந்து செல்வார்களாயின் அது குறித்துப் பரிதாபப்படமுடியுமே தவிர வேறு என்ன தான் செய்ய முடியும்.

# ஒற்றையாட்சியை திணிக்க முயல்வதால் சமாதான முயற்சிகள் மேலும் தாமதமடையும்

## இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றை மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தால் முன்வைக்க முடியாதெனவும் இதனால் இனப்பிரச்சினை மேலும் இழுபறிப்படும் நிலை தோன்றியிருப்பதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியாவின் உதவியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நாடியபோதும் இவ்விடயத்தில் நேரடியாகத தலையிட விரும்பாத இந்திய அரசு, ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு எட்டப்படுவதையே வலியுறுத்தியுள்ளது.

இந்திய அரசின் இந்த நிலைப்பாடு இலங்கை வெளிவிவ கார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் வலியுறுத்தி தெரிவிக கப்பட்டிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிததுள்ளன.

ஒற்றையாட்சிக்குள்ளேயே மஹிந்த ராஜபக்ஷ தீர்வினைத் திட்டவட்டமாகத் தெரிவித்து வருவதுடன் நாடு பிளவுபடுவதையும் தான் அனுமதிக்கப் போவதில்லை என்றும் வலியுறுத்தியுள்ளார். ஆனால் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கையில் சமஷடி அடிப்படையிலான தீர்வு ஒன்றை எட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளன.

இதனால் இனப்பிரச்சினைக்கான தீ॥வு விவகாரம் இன்னும் சிறிது நாட்களில் சூடுபிடிக்குமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.எனினும் மஹிந்த ராஜபக்ஷ இது விடயம் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டை அங்கு நேரடியாகச் சென்று இந்தியத் தலைவர்களுடன் ஆராய்ந்த பின்னரே இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரம் குறித்து விரிவாக ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 16ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த விஜயத்தின் போது பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் இரு தரப்பு உறவுகள் குறித்தும் பேசவிருக்கும் மஹிந்த முக்கியமாக இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டை வலியுறுத்துவார் என்றும் அந்த வட்டாரங்கள மேலும் தெரிவித்தன.

இதேவேளை, ஒற்றையாட்சி முறை தீர்விலிருந்து மஹிந்த ராஜபக்ஷ கீழிறங்குவாராயின் ஜே.வி.பி., ஹெல உறுமய ஆகியனவற்றின் கடும் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் எனபதால் சமஷடி முறையிலான தீர்வுக்கு அவர் இணங்குவது கடினமென்றும் இதனால் இனப்பிரச்சினை மேலும் இழுபறிப்படும் நிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை மஹிந்த தலைமையிலான அரசு முன்வைக்கும் ஒற்றையாட்சி தீர்வை அவர்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்.இதனையே தமிழீழத தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை சூட்சுமமாக சுட்டிக்காட்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதாவது ஒற்றையாட்சி தீர்வை கைவிட்டு விட்டு தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு ஏற்ற நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க கோருவதாகவே அவரது உரை அமைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மஹிந்த அரசினது ஒற்றையாட்சி தீர்வுத் திட்டத்தை புலிகளும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சர்வதேசமும் ஒற்றையாட்சி தீர்வை விரும்பாது என்பது தெளிவாகியுள்ளது.

ஆகவே இன்னும் சிறிது நாட்களில் இனப்பிரச்சினை தீர்வு விவகாரம் சூடுபிடிக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழகத்தின் 6 கோடி தமிழர்கள் அக்கறை கொண்டுள்ளனர்!

## மன்மோகன்சிங் அரசாங்கத்திற்கு நினைவூட்டுகிறது தினமணி நாளேடு

(புதுடில்லி)

ஈழத்தமிழர் பிரச்சினையில் ஆறு கோடி தாய்த் தமிழகத் தமிழர்கள் ஆழ்ந்த கவலை கொண்டிருக்கிறார்கள் என்பதை மன்மோகன் அரசு மறந்துவிடக்கூடாது என்று தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் தினமணி நாளேடு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தினமணி நாளேட்டில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, டில்லிக்கு வந்து பிரதமரைச் சந்தித்துப் பேசிய இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இலங்கையில் போர்நிறுத்தம் நீடிக்க வேண்டிய அவசியததை மன்மோகன் சிங் வற்புறுத்தியிருக்கிறார். அதே சமயத்தில் "போர் நிறுத்த உடன்படிக்கையை மதித்து நடப்பதென மஹிந்த ராஜபக்ஷ உறுதி பூண்டிருப்பதாகவும்" சமரவீர தெரிவித்திருக்கிறார்.

அதற்கு முன் மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் இ.அகமதுவைச் சந்தித்துக் கலந்துரையாடிய அவர், ஈழப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண்பதற்காக பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறு விடுதலைப் புலிகளுக்கு மஹிந்த அழைப்பு விடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

அப் பேச்சுவார்த்தைகள் திறந்த மனத்துடன் ஒளிவுமறைவுக்கு இடமில்லாமல் நடைபெற வேண்டும என்று ஜனாதிபதி விரும்புவதாகவும் அப்படி நடந்தால் மட்டுமே அதில் எட்டக்கூடிய உடன்பாடுகளை நாடே ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய முடியும் என்பதும் மஹிந்தவின் கருத்து என்றும் சமரவீர விளக்கியிருக்கிறார்.

ஆனால் ஈழப் பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கு இந்த அணுகுமுறை போதுமானதாகத் தோன்றவில்லை. போர் நிறுத்தம் நான்கு ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறநது. இச் சூழ்நிலையில ஈழப்பிரச்சினை தீர்வுக்கான திசையில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்றால இல்லையென்றே பதிலளிக்க வேண்டியிருக்கிறது.

இதற்கு முதன்மையான காரணம் -தீர்வுக்கான திட்டத்துக்கு சிங்களவர் இடையே செல்வாக்குப் பெற்றுள்ள சந்திரிகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும்- எதிர்க்கட்சியான ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும் எக்காலத்திலும் ஒருமுக ஆதரவு காட்ட முன்வராததேயாகும்.

இதற்கு அடிப்படைக் காரணம் -ஈழத்தமிழர்களுடைய கோரிக்கையின் அடிப்படையை புதிய ஆளும் சக்தி அங்கீகரிக்க மறுப்பதுதான். கூட்டாட்சி அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டுமென்ற சித்தாந்தத்தையே புதிய ஆட்சியாளர் ஏற்க மறுத்து வருகிறார்கள். பிறகு எப்படி திறந்த மனத்துடன் பரஸ்பர நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாய்ப்பு இருக்க முடியும்.

ஈழப் பிரச்சினையில் சர்வகட்சிகளின் ஒத்துழைப்புடன் வாஜ்பாய் அரசு வடித்த தேசியக் கொள்கையையே மனமோகன் அரசும் பின்பற்றுவதாக நாடாளுமன்றத்தில சில காலத்துக்கு முன் அறிவிக்கப்பட்டது. இக்கொள்கை நான்கு அம்சங்களைக் கொண்டது.

அதில் முக்கியமான அம்சம் என்னவெனில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் கூட்டாட்சிக் கட்டமைப்பு ஆட்சி முறை மூலம் ஈழப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்படவேண்டும் என்பதாகும்.

அதிலும் குறிப்பாக 2003 ஒக்டோபரில் டில்லியில் வாஜ்பாயும் பிரதமர் விக்கிரமசிங்கவும் வெளியிட்ட கூட்டறிக்கையிலும் இந்த அம்சம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கையின் ஒற்றுமைக்கு ஊறு ஏற்படாத வகையில் தீர்வு அமைந்திருப்பது எவ்வளவு அவசியமோ அதே அளவுக்கு கூட்டாட்சிக் கட்டமைப்பு ஆட்சி முறையும் பிரச்சினையின் தீர்வுக்கு அத்தியாவசியம் என்ற வாசகம அக் கூட்டறிக்கையில் எடுப்பாக இடம்பெறறிருந்தது.

ஆனால் இப்பொழுதோ அந்த அடிப்படைக் கொள்கையையே ஏற்க மறுக்கும் அரசு இந்தியாவுடன் பொருளாதார உடன்படிக்கை காண விரும்புகிறது.

இககட்டத்தில் 'கூட்டாட்சி அடிப்படையிலேயே தீர்வு" என்ற அடிப்படைக் கொள்கையை ராஜபக்ஷ அரசிடம் வலியுறுத்திக் கூற இந்திய அரசு தயங்கக்கூடாது.

ஏனெனில் ஈழப் பிரச்சினை 30 இலட்சம் தமிழர்களின வாழ்வுரிமை, சமத்துவக் குடியுரிமை, கலாசாரப் பாதுகாப்புரிமை சம்பந்தமானது.

இப்பிரச்சினையில் தாய்த் தமிழகத்தின் ஆறு கோடி தமிழர்கள் ஆழந்த கவலை கொண்டிருக்கிறார்கள் என்பதை மன்மோகன் அரசு மறந்துவிடக்கூடாது என்றுள்ளது. (த)

## எந்தவித அடிப்படை வசதியுமின்றி பாலாவோடையில் பாடசாலை

காரைநகர் பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கி வருகின்றது.

1990ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு பின்னர் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த இப் பாடசாலையில் 5 ஆசிரியர்களும் 54 மாணவர்களும கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கு எந்தவிதமான மலசலகூட வசதியோ, பாதுகாப்பான கிணற்று நீரோ, விளையாட்டு மைதானமோ இல்லாத நிலைமை காணப்படுகின்றது.இதனால் தொற்று நோய்கள் கூட பரவக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இப் பாடசாலைகளிற்கு அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒவவொன்றும் வந்து செலகின்றதே தவிர எவர்களும் அத்தியாவசிய தேவைகளைக் கூட நிவர்த்தி செய்ய முன்வரவில்லை எனக் கூறி ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-246)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



நாம் பலவாகத் தோன்றுகிறோம். ஆனால் நமது உண்மை ஒன்றே. அந்த ஒன்றிலிருந்து வேறுபட்டவர்களாக நம்மை நாம் எவ்வளவு குறைவாக நினைக்கிறோமோ, அவ்வளவு நமக்கு நல்லது. அந்த முழுப் பொருளிருந்து (இறைவன்) நாம் வேறுபட்டவர்கள் எனறு எவ்வளவு அதிகமாக நினைக்கிறோமே அவ்வளவுக்கு துயரமும் அதிகமாகும்.

சுவாமி விவேகானந்தர்

# தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் கொல்லப்பட்டால் பதிலுக்கு பல இராணுவத்தினர் கொல்லப்படுவர்

## 'மக்கள் படை' துண்டுப் பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய உணர்வாளர் ஒருவர் கொல்லப்பட்டால் அதற்குக் காரணமான இராணுவத்திலும், ஒட்டுக் குழுக்களிலும் பலர் கொல்லப்படுவார்கள். பதிலுக்குப் பதில் நடவடிக்கைகளை பொங்கியெழும் தமிழீழ மக்கள் படையாகிய நாங்கள் மேற்கொண்டே தீருவோம் என தமிழீழ மக்கள் படை என தெரிவித்து துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தமிழர் தாயகத்தில் இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளில் தொடர்ந்து வரும் இராணுவ வன்முறைகள், படு கொலைகள், உயிர்க் கொலை அச்சுறுத்தல்கள் மற்றும் இராணுவ நெருக்குவாரங்கள் அண்மைக்காலமாக அகரித்துச் செல்வதனால் மக்களின் இயல்பு வாழ்வு சீர்குலைக்கப்பட்டு நெருக்கடியான நிலை உருவாக்கப்பட்டு வருகின்றது.

இந் நடவடிக்கைகளுக்கு காரணமாக படைத்தரப்பும், புலனாய்வுப்பிரிவினரும், ஒட்டுக் குழுக்களுமே காரணமாக இருக்கின்றனர்.

இதன் உச்சக்கட்டமாக சிங்கள பௌத்த பேரின வாதசக்திகளால் திட்டமிட்ட அடிப்படையில் தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்துவதற்கு தமிழ்த் தேசிய உணர்வாளர்களையும், அறிஞர்களையும் அழிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுகின்றன.

இந்த வகையில் 20ஆம் திகதி நெடுந்தீவிலும், 24 ஆம் திகதி நீர்வேலியிலும், 26 ஆம் திகதி ஊர்காவற்றுறை தம்பாட்டியிலும் படுகொலை முயற்சிகளும், கொல்லகளும் நடத்தப்பட்டுள்ளன.

நீர்வேலியில் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மீது இராணுவ புலனாய்வுத் துறையினரும், இராணுவ ஒட்டுக் குழுவும் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் கோரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள், ஒருவர் படு காயம் அடைந்துள்ளார்.

தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்த தமிழ்த் தேசிய உணர்வாளர்களை தொடர்ந்தும் படு கொலை செய்வதற்கு இனி மேலும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். தமிழ்த் தேசிய உணர்வாளர் ஒருவர் கொல்லப்பட்டால் அதற்கு காரணமான ஆக்கிரமிப்பு படையிலும், ஒட்டுக் குழுக்ளிலும் பலர் கொல்லப்படுவார்கள்.

பதிலுக்கு பதில் நடவடிக்கைகளை பொங்கியெழும் தமிழீழ மக்கள் படையாகிய நாங்கள் மேற்கொண்டே தீருவோம் என மக்கள் படையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## காத்தான்குடி பிரதேச செயலர் கொழும்பில் மரணமானார்

(மட்டக்களப்பு)

இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த காத்தான்குடிப் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பலீல் (வயது-46) நேற்றுக் காலை மரணமானார்.

கடந்த வெள்ளிக் கிழமை பிரதேச செயலகத்துக்குள் வைத்து இலக்கம் இல்லாத மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கி தாரிகளினால் இவர் சுடப்பட்டார்.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இவர் நேற்று முன்தினம் மாலை மேலதிக சிகிச்சைக்காக உலங்கு வானூர்தி மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு அப்பலோ வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் அவர் காலமானார்.

இதே வேளை இவர் உயிரிழந்ததையடுத்து கிழக்கு நற்பிட்டி முனை, கல்முனை, மருத முனை, சாய்ந்தமருது, மலிகைக்காடு, நிந்தவூர் ஆகிய இடங்களில் நேற்று நண்பகலுக்கு பின்னர் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. (ச-4)

## நீர்வேலியில் நேற்றும் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் கடந்த முதலாம் திகதி இனந் தெரியாத நபர்களினால் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று மூன்றாவது நாளாகவும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நீர்வேலிப்பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வீதித்தடைகள் போடப்பட்டமையினால் போக்குவரத்து தடைப்பட்டது. இதனால் பருத்தித்துறை பிரதான வீதியூடான போக்குவரத்துக்கள் நடைபெறவில்லை. இதனால் பருத்தித்துறைப் பகுதியில் இருந்து யாழ்.நகருக்கான போக்குவரத்து பலாலி வீதி மற்றும் வேறு பாதைகளினூடாகவே நடைபெற்றது.

இதேவேளை பிற்பகல் 2 மணிக்கு பின்னர் வீதித்தடைகள் அகற்றப்பட்டு பருத்தித் துறை வீதியூடான போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. (ச-8)

## அரியாலையில் நேற்று இராணுவத்தினர் குவிப்பு

தாக்குதல் இடம் பெறக்கூடும் என்ற அச்சம் காரணமாக அரியாலைப் பகுதியில் பெருமளவு இராணுவத்தினர் நேற்று குவிக்கப்பட்டிருந்தனர்.

யாழ்.செயலகத்தை அண்மித்த பகுதிகளில் இருந்து நாவற்குழி பாலம் வரையிலான கண்டி வீதியில் நேற்று மாலை இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். இதன் காரணமாக அப்பகுதி மக்கள் நேற்றிரவு பீதியுடன் காணப்பட்டனர். அப்பாதையூடாக மக்கள் எவரும் போக்குவரத்தில் ஈடுபட வில்லை.

இதே வேளை யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளின் இராணுவக் காவலரண்களுக்கு முன்பாகவும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இரவு வேளையில். சென்றவர்கள் மறிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். சிலர் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-8)

### இராணுவ மினி முகாம்...

இராணுவத்தினரால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த பொது மக்கள் 2 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் பலாலி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த அச்சவேலி 511 வது படையணியைச் சேர்ந்த அபயவர்த்தன என்ற இராணுவ வீரர் மாலை 6.20 மணியளவில் உயிரிழந்ததாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இத்தாக்குதல் நடைபெற்ற இடத்தை யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் நேரில்சென்று பார்வையிட்டார். (ச-8,4)

### காவலரண்கள்...

நல்லூர் முருகன் கோயில் அடியிலும் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இராணுவக்காவலரண் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இராணுவவீரர் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவங்களினையடுத்து யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்துக் காவலரண்கள் மீதும் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். (ச-4)

### வட-கிழக்கு வன்முறைகள்...

நிலைமைகள் சீர்செய்யமுடியாத அளவிற்கு படிப்படியாக சீர்குலைந்து விடும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டுவருவதில் பாரிய தடை ஏற் படும்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இந்த வன்முறைகள் நீடிக்காத வகையில் ஆகக்கூடியவரை இந்த நிலைமைகளை மாற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்நிலையில் நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்தமும் முறிவடையும்நிலை ஏற்படுவதோடு சமாதானச் செயற்பாடுகளும் முறிவடையாது யுத்தமொன்றிற்கு இட்டுச்செல்லும் நிலை ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (ச-4,8)

### கிளைமோர்த் தாக்குதலில்...

பலாலி இராணுவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதன் போது வீதியால் சென்ற மூன்று பொது மக்களும் படுகாய மடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தினையடுத்து திருநெல்வேலிச் சந்தியில் இருந்து சம்பவம் இடம் பெற்ற இடம் வரையும் போக்குவரத்துக்கள் இராணுவத்தினரால் இடைநிறுத்தப்பட்டன. உடனடியாக பலாலி வீதியில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

அப்பகுதியில் நின்ற பொது மக்கள் பலர் கடுமையாகத் தாக்கப்பட்டனர். சிலர் விசாரணைக்கென இராணுவத்தினரால் அழைத் துச் செல்லப்பட்டனர். அவ்வழியூடாக பயணம் செய்த அனைத்து வாகனங்களும் இடை நிறுத்தப்பட்டு பொலிஸாரால் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டது. இச்சம்பவத்தினை யாழ்.மாவட்ட மேல திக நீதிவான் சிறிநிதி நந்தசே கரன் நேரில் சென்று பார்வையிட் டதுடன் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதே வேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதன் பின்னர் இடம் பெற்ற முதலாவது கிளைமோர்த் தாக்குதல் சம்பவம் இது என்பதுடன் அதிகளவு இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவமும் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-8,4,43,130)

## கோண்டாவில் சம்பவத்திற்கு அரசாங்கம் கடும் கண்டனம்

(கொழும்பு)

கோண்டாவில் பகுதியில் நேற்றுக் கிளைமோர்த்தாக்குதலில் 6 படையினர் கொல்லப்பட்ட சம்பவத்தை அரசாங்கம் கண்டிப்பதாக அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது அவர்கள் இராணுவ காவலரண்களுக்கும், முகாம்களுக்கும் உணவு வகைகளையும் தபால்களையும் விநியோகித்துக் கொண்டிருந்தனர்.

சாதாரண கடமைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது நடத்தப்பட்ட இத்தாக்குதலானது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பயங்கரவாதச்செயலாகவே கருத வேண்டியுள்ளது.

அத்துடன் நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை மீறும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்படுள்ளது.

சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு புதிய ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ள நிலையில் புலிகளினால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான தாக்குதல்கள் ஆத்திரமூட்டுவதுடன் அரசியல் தீர்விலும், பேச்சுவார்த்தைகளிலும் அவர்களின் நம்பிக்கையீனத்தை எடுத்துக் காட்டுகின்றது.

சமாதான பேச்சுவார்த்தைகளை மீளவும் முன்னெடுத்துச் செல்வதற்கு தடையாகவுள்ள இத்தகைய பயங்கரவாதச் செயல்களை கண்டிப்பதாக அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## இந்திய அரசிற்கு வை.கோ.எச்சரிக்கை

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவை தலையிட வைக்க இலங்கை அரசு விரிக்கும் நயவஞ்சக வலையில் விழவேண்டாம் என்று இந்திய அரசுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை ஊடகவியலாளர்களுக்கு வை.கோ. கடந்த சனிக்கிழமை அளித்த நேர்காணலில் கூறியதாவது ;

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்களின் மூலம் தமிழர்களுக்கு அடிப்படை உரிமை கூட கிடைக்காது என்று தான் எண்ணத்தோன்றுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்அரசுக்கும் இடையே சமாதானம் ஏற்படுத்தும் முயற்சியில் நோர்வேக்கு முக்கியத்துவம் அளிப்பதை விட இந்தியாவுக்கு அதிக முக்கியத்தும் அளிக்க வேண்டும் என்று அவர் கூறுவது நயவஞ்சகமான கருத்தாகும் என்றார் வை.கோ. (ச)

### மூதூரில் தொடரும் வன்...

அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தப்பிரதேசத்தில் தொடரும் பதற்ற நிலை காரணமாக வழமை நிலை முற்றாக பாதிப்படைந்துள்ளது.

பெருமளவிலான இராணுவத்தினரும் பொலிஸாரும் மூதூர் பிரதேச கிராமங்களில் குவிக்கப்பட்டுள்ளனர். இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மூதூர் பிரதேசத்துக்குச் சென்று நிலைமைகளை கண்காணித்தனர்.

இதனிடையே அடையாளம் தெரியாத நபர்களினால் இரு தமிழர்கள் சனிக்கிழமை இர்வு கடத்தப்பட்டதாகவும் நேற்று வரை அவர்களது நிலைமை தெரியவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ச-4)








இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.